இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டம்

---

*[1990, யூன் மாதம் 01 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1990, யூன் மாதம் 01 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 3.90 தபாற்செலவு: ரூபா 3.10

# 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டம்

[1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 46/87

மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு ஒன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களுக்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்வதற்கும், தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை ஒன்றைத் தாபிப்பதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்**

## பாகம் I

## அத்தியாயம் I

### மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவைத் தாபித்தல்

2. மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு என அழைக்கப்படவேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (அது இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்). **மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவைத் தாபித்தல்.**

3. (1) ஆணைக்குழுவின் பொதுவான குறிக்கோள்கள் பின்வருமாறு :— **ஆணைக்குழுவின் குறிக்கோள்கள்**

(அ) பொருளாதாரத்தின் மனித வளத் தேவைகளுக்கிசைவாக மூன்றும் நிலைக்கல்வி முறையை எல்லா மட்டங்களிலும் திட்டமிடுதல், ஒன்றிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்;

(ஆ) சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களுட்பட மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி விருதுகளை வழங்குவதற்குத் தேசிய ரீதியில் அங்கீகாரம்பெற்ற முறைமைகளை அபிவிருத்திசெய்தல்; அத்துடன்

(இ) மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி வழங்கும் நிறுவகங்களிலும், முகவர் நிலையங்களிலும் வேறு எல்லாத் தாபனங்களிலும் கல்விசார் மற்றும் பயிற்சித் தராதரங்களைப் பேணுதல்.

(2) மூன்றும் நிலைக் கல்வியையும் தொழிற் கல்வியையும் அபிவிருத்தி செய்கையில், ஆணைக்குழு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 27 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (ஏ) என்னும் உட்பந்தியில் தரப்பட்டுள்ள பணிப்புரைக்கும் நெறிகளினால் வழிகாட்டப்படுதல் வேண்டும்.

2—உ 007550—1,750 (01/90)

ஆணைக்குழுவின் தத்துவங்கள்.

4. ஆணைக்குழு பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவம் உடையதாயிருத்தல் வேண்டும் :—

(அ) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி தொடர்பான பொதுக் கொள்கை மீது அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஆ) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி தொடர்பான பொதுக் கொள்கைக்குப் பயன்கொடுக்கப்படுதலை உறுதிப்படுத்தல் ;

(இ) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி முறைமையை ஒன்றிணைத்தல் ;

(ஈ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவகங்களின் நிதிசார், பணியாட்டொகுதி மற்றும் வேறு தேவைப்பாடுகள்பற்றிய அறிக்கைகளை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் ;

(உ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவகங்களுக்கும் ஆட்களுக்கும் தாபனங்களுக்கும் அபிவிருத்தித் திட்டமொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நோக்கம் தொடர்பில், அமைச்சரின் அங்கீகாரத்துடன் மானியக்கொடைகளையும் உதவிப்பணங்களையும் அளித்தல் அல்லது கொடுப்பனவு செய்தல் ;

(ஊ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் பதிவுசெய்யப்படும் எல்லா நிறுவகங்களினதும் தாபனங்களினதும் மாணவர்களுக்கான அத்துடன் பணியாட்டொகுதியினருக்கான தகுந்த நலன்களை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான வசதிகளைத் தீர்மானித்தல் ;

(எ) விதிகளை ஆக்குதல் ; அத்துடன்

(ஏ) ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையென அல்லது உகந்தவையென அல்லது இடைநேர் விளைவானவையென ஆணைக்குழு அபிப்பிராயப்படுகின்ற அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

அமைச்சரது பொதுவான பணிப்புரைகள்.

5. (1) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி பற்றிய பொதுவான பணிப்புக்கும் இச்சட்டத்தின் நிருவாகத்திற்கும் அமைச்சர் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(2) தேசியக் கொள்கையைப் பின்பற்றி மூன்றாம் நிலைக் கல்விக்கும் மற்றும் தொழிற் கல்விக்கும் அத்துடன் இச்சட்டத்தின் நிருவாகத்திற்குமான அமைச்சரின் பொறுப்புக்களைப் பயனுள்ளவகையில் நிறைவேற்றுவதற்கு அவரை இயலச்செய்வதற்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எழுத்திலான பொதுப் பணிப்புரைகளை அமைச்சரானவர் காலத்திற்குக்காலம் ஆணைக்குழுவுக்கு வழங்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அமைச்சரானவர், 20 ஆம், 26 ஆம் பிரிவுகளின் கீழ் ஆணைக்குழு அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பது தொடர்பிலான அத்தகைய எவையேனும் பணிப்புரைகளை ஆணைக்குழுவுக்கு வழங்குதல் ஆகாது.

(3) ஆணைக்குழுவின் பணிகளும் கடமைகளும் தொடர்பில் அமைச்சர் அவசியமானதெனக் கருதக்கூடியவாறன அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு ஆணைக்குழுவை அவர் காலத்துக்குக்காலம் பணிக்கலாம்.

(4) ஆணைக்குழுவானது அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி யொழுக வேண்டும் என்பதுடன் மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி வழங்கும் நிறுவகம், முகவர் நிலையம், அத்துடன் வேறு தாபனம் ஒவ்வொன்றினதும் ஆளும் அதிகாரசபை அவ்விதம் ஆணைக்குழு இணங்கி யொழுகுவதற்கு அதனை இயலச்செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறன அத்தகைய தகவலை அல்லது வசதிகளை ஆணைக்குழுவுக்குக் கொடுத்தலும் அல்லது அளித்தலும் வேண்டும்.

**ஆணைக்குழுவின் அமைப்பு.**

6. (1) ஆணைக்குழுவானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்விப் பணிப்பாளர் தலைமை அதிபதி ;

(ஆ) தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் தவிசாளர் ;

(இ) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப் பாளர் தலைமையதிபதி ;

(ஈ) உயர்கல்வி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சிலுள்ள தொழினுட்பக் கல்விப் பணிப்பாளர் ; அத்துடன்

(உ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கைத்தொழில், வர்த்தகம் அல்லது கல்வித்துறைகளில் அனுபவம் வாய்ந்தவரான ஆட்களிலிருந்து அமைச்சரின் கலந்தாலோசனையுடன், சனதிபதியினால் நியமிக்கப்படும் நான்கிற்குக் குறையாத அத்துடன் ஆறுக்கு மேற்படாத ஆட்கள்.

(2) பாராளுமன்றத்தின் அல்லது மாகாணசபையொன்றின் உறுப்பினரொருவராக இருக்கின்ற அல்லது அவ்வாறு வருகின்ற ஆளொருவர் ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக இருப்பதற்குத் தகைமையற்றவர் ஆதல் வேண்டும்.

(3) சனதிபதியானவர் அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கவேண்டும். (இவர் இதனகத்துப்பின்னர் " தவிசாளர் " எனக் குறிப்பீடு செய்யப்படுவார்).

(4) ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட தேதியில் இருந்து நான்கு ஆண்டுகள் கொண்ட ஒரு காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

**பதவியை வறிதாக்கல்.**

7. (1) சனதிபதியானவர், அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர், நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை அதற்கான காரணம் எதுவும் காட்டாது எழுத்திலான கட்டளையின் மூலம் பதவியில் இருந்து அகற்றலாம் என்பதுடன், அதன்மேல் அத்தகைய உறுப்பினர் பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் அப்பயன்பட அமைந்த கடிதத்தின் மூலம் எந்நேரத்திலும் தமது பதவியைத் துறக்கலாம் என்பதுடன் அத்தகைய பதவி துறத்தலானது அக்கடிதம் அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுவதாதலும் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரின் பதவி, இறப்பினுல், பதவி விலகலால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதால் வறிதாகுமிடத்து, சனுதிபதியானவர், 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க, அத்தகைய உறுப்பினரின் இடத்துக்கு வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம். அவ்வாறு அத்தகைய உறுப்பினருக்குப் பதிலாக நியமிக்கப்படும் ஆள் எவரும் அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்ரூரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

**ஆணைக்குழுவின் கூட்டங்கள்.**

8. (1) தவிசாளர் ஆணைக்குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயிராதபோது அத்தகைய கூட்டத்தில் சமுகளித்துள்ள உறுப்பினர்கள், தம்முள் ஒருவரை அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்கவெனத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் ஆணைக்குழுவினுல் முடிவுசெய்யப்படல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் கூட்டம் எதிலும் முடிவெடுப்பதற்கு வரும் விடயங்கள் யாவும், சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களில் பெரும்பான்மை வாக்கைக்கொண்டு முடிவுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாக இருக்கின்ற விடயத்தில், தவிசாளர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினர் தமது வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) தவிசாளர்—

(i) ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல், அத்துடன் இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காகத் தாம் அவசியமெனக் கருதும் கொள்கைகளையும் வழிமுறைகளையும் ஆணைக்குழு சீர்தூக்கிப்பார்ப்பதற்காகச் சமர்ப்பித்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும் ; அத்துடன்

(ii) ஆணைக்குழுவின் அலுவல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திற்காக ஆணைக்குழுவினுல் கையளிக்கப்படுகின்றவாறுன அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(5) மூன்றும், நான்காம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது, அதன் கூட்டங்கள் தொடர்பிலும், அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கொண்டுநடாத்துவது தொடர்பிலும் அதன் சொந்த நடவடிக்கைமுறையினை ஒழுங்குபடுத்தலாம்.

(6) ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணத்தால் அல்லது உறுப்பினர் ஒருவரை நியமிப்பதில் உள்ள ஏதேனும் குறைபாட்டினுல் மட்டும் ஆணைக்குழுவினது செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

(7) தவிசாளர், லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்தினால் தற்காலிகமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து, அமைச்சரானவர் தவிசாளர் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிய இயலாதிருக்கின்ற அத்தகைய காலப்பகுதிக்கு உறுப்பினர்களுள் ஒருவரைப் பதில் தவிசாளராக நியமிக்கலாம்.

குழுக்கள்.

9. (1) ஆணைக்குழுவானது, அதனுடைய பணிகளைப் புரிவதில் உதவி புரிவதற்கெனக் குழுக்களைத் தாபிக்கலாமென்பதுடன் அத்தகைய எவையேனும் குழுக்களின் உறுப்பினர்களாக இருப்பதற்குத் தகுதியுடையவர்களென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஆட்கள் எவர்களையும் நியமிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்படும் குழுவொன்றுக்கு அது தகுந்ததெனக் கருதும் அதன் தத்துவங்களுள் அத்தகையவற்றை கையளிக்கலாம். ஆனால் குழுவொன்றுக்குக் கையளிக்கப்பட்டிருக்கக்கூடியதான ஏதேனும் தத்துவத்தை அது உரிமைதுறந்ததாதல் ஆகாது. ஆணைக்குழுவானது ஒரு குழுவினால் செய்யப்படும் முடிபு எதனையும் திருத்தலாம் அல்லது நீக்கலாம்.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணியாட்டொகுதியினரும்.

10. (1) (அ) மூன்றும் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்விப் பணிப்பாளர் தலைமையதிபதி என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவர் (இவர் இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படுவார்);

(ஆ) ஆணைக்குழுவுக்கான செயலாளர் ஒருவர்; அத்துடன்

(இ) பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு உதவுவதற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் பணியாட்டொகுதியினரும்,

நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமை அதிபதி ஆணைக்குழுவின் அலுவலகத் தலைவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் அதன் நிருவாகத்திற்குப் பொறுப்புடையவராக இருத்தலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமை அதிபதியானவர்—

(அ) பதினான்காம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவகங்களையும் 15 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பாட நெறிகளை நடாத்தும் அத்தகைய ஆட்களையும் தாபனங்களையும் மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழுவினால் கையளிக்கப்படும் அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், இப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அவர் அவசியமெனக் கருதும் அத்தகைய கட்டளைகளை ஆக்கத் தத்துவம் உடையவராயிருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமை அதிபதியால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையைத் திருத்துவதற்கு, மீளாய்வுசெய்வதற்கு அல்லது நீக்குவதற்கு ஆணைக்குழு தத்துவமுடையதாயிருத்தல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் ஆதனமும் அத்துடன் ஆணைக்குழுவிற்கு வருமதியான பணங்களுக்கும் வேறு ஆதனத்துக்கும் வழக்குத் தொடுத்து அறவிடும் பிரத்தியேக உரிமையும், வழக்குத் தொடுப்பதற்கும் அத்துடன் அத்தகைய ஒப்பந்தங்கள், உரித்து மாற்றங்கள் அத்துடன் அத்தகைய ஆதனம் தொடர்பிலான சட்டமுறையான வேறு எல்லாக் கருமங்களையும் செய்வதற்கும் பணிப்பாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவத்துடன், அவருக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்; அத்துடன், இப்பிரிவின் பயனைக் கொண்டு பணிப்பாளர் தலைமையதிபதியினால் எடுக்கப்படும் எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள், இடைநிறுத்தம் செய்யப்படுதல் ஆகாதென்பதுடன் அவரின் இறப்பு, பதவி துறத்தல், அவர் இளைப்பாறுதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாகத் தணிதலும் ஆகாது, ஆனால் அவரை அடுத்துறும் ஆளினாலும் அவரின் பெயரிலும் அவை கொண்டுநடாத்தப்படலாம்.

## அத்தியாயம் II

## அபிவிருத்தித் திட்டம்

அபிவிருத்தித் திட்டம்.

11. (1) ஆணைக்குழுவானது இலங்கையில் மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வியின் அபிவிருத்திக்காகக் காலத்துக்குக்காலம் அமைச்சரினால் வழங்கப்பட்ட தகவு அல்லது நழைவுத் தேவைப்பாடுகளுக்கான கட்டளைகள் உள்ளிட்ட எவையேனும் வழிகாட்டி நெறிகளுக்கு இணங்க விடயத்துக்கேற்றவாறு திட்டமொன்றை அல்லது, திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும். அமைச்சரானவர், அதன்மீதான தமது அறிக்கையுடன் அத்தகைய ஒவ்வொரு திட்டத்தையும் அல்லது திட்டங்களையும் அங்கீகாரத்துக்காகச் சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) சனாதிபதியானவர், அமைச்சரின் கலந்தாலோசனையுடன், திருத்தங்களுடனே அல்லது திருத்தங்கள் இன்றியோ அத்தகைய திட்டத்தை அல்லது திட்டங்களை அங்கீகரிக்கலாம்.

(3) சனாதிபதியினால் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு திட்டமும் மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி அபிவிருத்தித் திட்டம் ஒன்றென அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். (இச்சட்டத்தில் இது "அபிவிருத்தித் திட்டம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) எல்லா அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பயன்கொடுப்பது ஆணைக்குழுவின் பொறுப்பாதல் வேண்டும்.

(4) மாகாணமொன்றினது முதலமைச்சரின் வேண்டுகோளின் மேல் சொல்லப்பட்ட மாகாணத்தின் மூன்றும் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வியின் அபிவிருத்திக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் திட்டமொன்றைத் தயாரிக்குமாறு அமைச்சர் ஆணைக்குழுவைப் பணிக்கலாம். சனாதிபதி, (3) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானமொன்றைச் செய்வதற்கு முன் அதன் முதலமைச்சருடன் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், அபிவிருத்தித் திட்டமொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நோக்கம் தொடர்பில் எவையேனும் மானியக் கொடைகளை அளிக்கலாம் அல்லது உதவிப்பணம் எதனையும் கொடுப்பனவு செய்யலாம்.

(6) பிராந்தியக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கலைக் கூடங்கள் என்பன மூன்றும் நிலைக் கல்வியையும் மற்றும் தொழிற் கல்வியையும் அல்லது மூன்றும் நிலைக் கல்வியை அல்லது தொழிற் கல்வியை வழங்கும் பொது நிறுவனங்களாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் ஏற்பாடுகள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

**தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மூன்றும் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்வி விருதுகளின் முறைமைக்கு ஆணைக்குழுத் திட்டங்களைத் தயாரித்தல்.**

12. (1) தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மூன்றும் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்வி விருதுகள் எவற்றுக்கும் அத்தகைய நோக்கத்துக்காகப் பரீட்சையொன்றாகப் பதிவுசெய்யப்பட்ட பரீட்சையெதனையும் அங்கீகரித்தல் உட்பட, ஆணைக்குழுவானது, 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும்.

(2) அபிவிருத்தித் திட்டமொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் விருதுகள்பற்றிய செயற்றிட்டமொன்றை உள்ளடக்குகின்ற போதிலெல்லாம், அத்தகைய விருதுகள்பற்றிய செயற்றிட்டமானது, தேசிய மூன்றும் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்வி விருதொன்றாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் III

### பதிவுசெய்தல்

**குறித்துரைக்கப்பட்ட பாடநெறிகளைத் தீர்மானித்தல்.**

13. (1) பின்வருவன தவிர்ந்த எவரேனும் ஆளினால் அல்லது தாபனத்தினால் நடாத்தப்படும் ஏதேனும் மூன்றும் நிலைக்கல்விப் பாட நெறியை அல்லது தொழிற் கல்விப் பாடநெறியை குறித்துரைக்கப்பட்ட பாடநெறியொன்றாக அபிவிருத்தித் திட்டமொன்று குறித்துரைக்கலாம் :—

(அ) 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவகம்;

(ஆ) 14 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் விலக்களிக்கப்பட்ட ஏதேனும் நிறுவகம்; அல்லது

(இ) தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய பாடநெறி 15 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக எத்தேதியிலிருந்து குறித்துரைக்கப்பட்ட பாடநெறி ஒன்றெனக் கருதப்படல் வேண்டுமோ அத்தேதியொன்றை நியமிக்கலாம்.

நிறுவகங்களைப் பதிவுசெய்தல்.

14. (1) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்காமல், மூன்றாம் நிலைக் கல்வியையும் தொழிற் கல்வியையும் அல்லது மூன்றாம் நிலைக் கல்வியை அல்லது தொழிற் கல்வியை வழங்குவதற்கு ஏதேனும் நிறுவகத்தை, ஆள்எவரும், தாபித்தலோ, முகாமைசெய்தலோ, நடாத்துதலோ அல்லது கட்டுப்பாடு செய்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யும் நோக்கத்துக்காக, விடயத்திற்கேற்ப மூன்றாம் நிலைக்கல்வியையும் தொழிற்கல்வியையும் அல்லது மூன்றாம் நிலைக்கல்வியை அல்லது தொழிற் கல்வியை வழங்கும் தாபனங்களின் வகுதிகளை ஏதேனும் அபிவிருத்தித் திட்டமானது வகைப்படுத்தலாம்.

(3) பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன்மேல் பணிப்பாளர் தலைமை அதிபதி கிடைக்கக்கூடிய வசதிகள் உட்பட நிறுவகத்தின் உகந்த தன்மைபற்றியும் நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரின் போதுமாந்தன்மைபற்றியும் ஆணைக்குழுவுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமை அதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்மேல், நிறுவகமானது விடயத்திற்கேற்ப மூன்றாம் நிலைக்கல்வியையும் தொழிற் கல்வியையும் அல்லது மூன்றாம் நிலைக்கல்வியை அல்லது தொழிற் கல்வியை அபிவிருத்தித் திட்டங்களுக்கு இசைவாக போதுமான அளவில் வழங்க இயலுமானதாக உள்ளதென ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழு, அத்தகைய விண்ணப்பங்களை அங்கீகரித்தல் வேண்டும். அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன்மேல், பணிப்பாளர் தலைமை அதிபதி ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய பெயரின்கீழ் மருடப் பெயரின்கீழும் அத்தகைய நிறுவகத்தைப் பதிவு செய்தல் வேண்டும். ஆணைக்குழு, நிறுவகத்தின் ஆளும் அதிகாரசபையையும் நிறுவகம் எத்தோதான வகுதியின்கீழ்ப் பதிவுசெய்யப்பட வேண்டுமோ அத்தோதான வகுதியையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமை அதிபதியானவர், (4) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவகங்களின் நிரல் ஒன்றையும் அத்துடன் அந்த நிறுவகங்கள் தொடர்பில் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வேறு விபரங்களையும் காலத்துக்குக்காலம் கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகள்—

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு உயர் கல்வி நிறுவகங்கள்;

(ii) (276 ஆம் அத்தியாயமான) சட்டக் கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவை;

(iii) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம்; அத்துடன்,

(iv) 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கல்விக் கல்லூரிகள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கல்விக் கல்லூரிகள்,

என்பனவற்றிற்கு ஏற்புடையனவாதலாகாது.

15. (1) இச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படாமல் குறித்துரைக்கப்பட்ட பாடநெறியொன்ருக இருக்கின்ற ஏதேனும் மூன்றும் நிலைக்கல்விப் பாடநெறியையும் தொழிற்கல்விப் பாடநெறியையும் அல்லது மூன்றும் நிலைக்கல்விப் பாடநெறியை அல்லது தொழிற் கல்விப்பாடநெறியை, ஆள் எவரும் அல்லது தாபனம் எதுவும் நடாத்துதல் ஆகாது.

குறித்துரைக்கப்பட்ட பாடநெறிகளைப் பதிவு செய்தல்.

(2) பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன்மேல், பணிப்பாளர் தலைமை அதிபதி, கிடைக்கக்கூடிய வசதிகள் மற்றும் ஆளின் அல்லது தாபனத்தின் பணியாட்டொகுதியினரின் போதுமாந்தன்மை உட்பட ஆளின் அல்லது தாபனத்தின் உகந்த தன்மை பற்றிய அறிக்கையொன்றினை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமை அதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மீது, விடயத்திற்கேற்ப, ஆள் அல்லது தாபனம், மூன்றும் நிலைக்கல்வியையும் தொழிற்கல்வியையும் அல்லது மூன்றும் நிலைக்கல்வியை அல்லது தொழிற்கல்வியை அபிவிருத்தித் திட்டங்களுக்கு இசைவாகப் போதுமான அளவில் வழங்குவதற்கு இயலுமானதாக இருக்கிறார் என அல்லது உள்ளதென ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழு அத்தகைய விண்ணப்பத்தை அங்கீகரித்தல் வேண்டும். அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன்மேல் பணிப்பாளர் தலைமை அதிபதியானவர் அத்தகைய ஆளை அல்லது தாபனத்தை, ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படும் அத்தகைய பெயரின்கீழும் மகுடப் பெயரின்கீழும், பதிவுசெய்தல் வேண்டும். ஆணைக்குழு ஆளின் அல்லது தாபனத்தின் ஆளும் அதிகாரசபையையும் அத்துடன் ஆள் அல்லது தாபனம் எத்தோதான வகுதியின்கீழ் பதிவுசெய்யப்படவேண்டுமோ அத்தோதான வகுதியையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆட்களின் அல்லது தாபனங்களின் நிரல் ஒன்றையும், அவ்வாட்கள் அல்லது அத்தாபனங்கள் தொடர்பில் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வேறு விபரங்களையும் காலத்துக்குக் காலம் பணிப்பாளர் தலைமையதிபதி கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

16. (1) ஆள் எவரும் அல்லது தாபனம் எதுவும் இச்சட்டத்தின்கீழ் பணிப்பாளர் தலைமை அதிபதியிடம் பதிவுசெய்யப்பட்டிராமல் ஏதேனும் மூன்றும் நிலைக்கல்வி விருதை அல்லது தொழிற்கல்வி விருதொன்றினை அளிப்பதற்காக அல்லது வழங்குவதற்காக ஏதேனும் பரீட்சையை நடாத்துதல் ஆகாது :

அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைகளைப் பதிவு செய்தல்.

ஆயின் எவ்வாருயினும் இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவன தொடர்பாக ஏற்புடையனவாதலாகாது :—

(அ) 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் நிறுவகம்;

(ஆ) 14 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட ஏதேனும் நிறுவகம் ;

(இ) 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பாடநெறிகளை நடாத்தும் எவரேனும் ஆள் அல்லது தாபனம் ; அத்துடன்

(ஈ) ஒரு தனி நிறுவகத்தின் அல்லது ஒழுங்கமைப்பின் பயிற்சியாளர்களுக்கென அல்லது ஊழியர்களுக்கென அதனது உள்ளக நோக்கங்களுக்காக நடாத்தப்படும் ஏதேனும் பரீட்சை.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்வதன் நோக்கத்திற்காக கொடுத்துதவப்பட வேண்டிய தகவல்கள் விதித்துரைக்கப்படல் வேண்டும்.

(3) பதிவு செய்வதற்கான விண்ணப்பம் பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு இசைவாக உள்ள விண்ணப்பங்கள் யாவற்றையும் பணிப்பாளர் தலைமை அதிபதி ஆணைக்குழுவுக்கு அனுப்புதலும் வேண்டும்.

(4) விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கு இசைவாக இருக்கின்ற விண்ணப்பங்கள் யாவற்றையும் ஆணைக்குழுவானது அங்கீகரித்தல் வேண்டும். அங்கீகாரத்தின் மேல், பணிப்பாளர் தலைமை அதிபதி அத்தகைய பரீட்சையினைப் பதிவு செய்தலும் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட பரீட்சைகளின் நிரலொன்றை பணிப்பாளர் தலைமை அதிபதி, வர்த்தமானியில் காலத்துக்குக்காலம் வெளியிடச்செய்வித்தல் வேண்டும்.

**14 ஆம், 15 ஆம் பிரிவுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவகங்கள், ஆட்கள் மற்றும் தாபனங்கள் தொடர்பிலான ஆணைக் குழுவின் தத்துவங்கள்.**

17. (1) பிரிவு 14 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவகம் தொடர்பிலும் அத்துடன் பிரிவு 15 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆட்கள் மற்றும் எவையேனும் தாபனங்கள் தொடர்பிலும் ஆணைக்குழுவானது பின்வரும் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் :—

(அ) 14 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவகத்தில் வழங்கப்பட இருக்கும் கற்கை நெறிகளையும், பயிற்சி நெறிகளையும் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்திற்கு இயைபாக தீர்மானித்தல் ;

(ஆ) (i) பதிவு செய்யப்பட்ட ஏதேனும் தாபனத்தினால் நடாத்தப்படும் ஒவ்வொரு கற்கை நெறிக்கும் பயிற்சி நெறிக்கும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான தேவைப்பாடுகள் ; அத்துடன்

(ii) குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு பாடநெறிக்கும் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான தேவைப்பாடுகள்

என்பவற்றைத் தீர்மானித்தல்.

(இ) பணியாட்டொகுதியினரின் தகைமைகளைத் தீர்மானித்தல் ;

(ஈ) (i) கற்கை நெறிகள் தொடர்பிலான பாட விதானத்திற்கும், அத்துடன்

(ii) பயிற்சி நெறிகள் தொடர்பிலான பாடத்திட்டத்திற்கும்,

அத்துடன் பதிவு செய்யப்பட்ட நிறுவகங்கள், குறித்துரைக்கப்பட்ட பாட நெறிகளை நடாத்தும் ஆட்கள் அல்லது தாபனங்கள் அத்தகைய வழி காட்டு நெறிகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்குமான வழிகாட்டு நெறிகளை வழங்குதல் ;

(உ) பேணப்பட வேண்டிய கல்விசார் மற்றும் பயிற்சித் தராதரங்களைத் தீர்மானித்தல்;

(ஊ) சான்றிதழ்களையும், அதிவிசேட தகைமைகளையும் வேறு விருதுகளையும் வழங்குவதற்காக நடாத்தப்படவேண்டிய பரீட்சைகளின் வகையைத் தீர்மானித்தல்;

(எ) மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் தகுந்த நலன்களை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான வசதிகளைத் தீர்மானித்தல்;

(ஏ) பதிவு செய்யப்பட்ட நிறுவகத்தின் முகாமையாளர்களினதும், தலைவர்களினதும் கடமைகளையும் அவர்களது கடமைகளைப் புரியும் முறையையும் தீர்மானித்தல்;

(ஐ) தேசிய மூன்றும் நிலைக்கல்வி விருதுகளும் தொழிற்கல்வி விருதுகளும் தொடர்பிலான பாடவிதானத்தை அங்கீகரித்தல் அத்துடன் அவை தொடர்பிலான ஏதேனும் பரீட்சை நடாத்தப்பட வேண்டிய விதத்தைத் தீர்மானித்தல்;

(ஒ) போதனாசிரியர்களின் தகைமைகள், பயிற்சிக்காலம், சம்பளங்கள், நியமனம், நாம் அவர்களை இடைநிறுத்தம் செய்தல் மற்றும் அவர்களை நீக்கம் செய்தல் என்பவற்றைத் தீர்மானித்தல்;

(ஓ) எந்நாட்களிலும் எந்நேரங்களின்போதும் மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சமுகமளித்தல் வேண்டும் என்பதையும் குறித்துரைக்கப்பட்ட பாடநெறிகள் நடாத்தப்படும் எல்லாப் பதிவு செய்யப்பட்ட நிறுவகங்களிலும் மற்றும் இடங்களிலும் எந்நாட்கள் விடுமுறை நாட்களாகப் பின்பற்றப்படல் வேண்டுமென்பதையும் தீர்மானித்தல்;

(ஔ) பதிவு செய்யப்பட்ட நிறுவகங்களிலும் குறித்துரைக்கப்பட்ட பாடநெறிகள் நடாத்தப்படும் ஏதேனும் இடத்திலும் பேணப்பட வேண்டிய தங்கும் இடவசதியின் தராதரங்களைத் தீர்மானித்தல்; அத்துடன்

(க) 15 ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாடநெறியை நடாத்தும் ஆளொருவரினால் அறிவித்தல்கள் வெளிக்காட்டி வைக்கப்படும் விதத்தைத் தீர்மானித்தல்.

(2) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் ஆலோசனையின்மீது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை ஒன்றின் மூலம் ஏதேனும் குறித்த கற்கை நெறி அல்லது பயிற்சி நெறி தொடர்பில் பயிற்றப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்துரைப்பதுடன், அவ்வாறு குறித்துரைப்பதற்கான காரணத்தையும் கூறுதல் வேண்டும். அத்தகைய கட்டளை வெளியிடப்பட்டதன் மீது ஆணைக்குழுவினது அத்தகைய கட்டளையின் ஏற்பாடுகளுக்கிணங்க 14 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட எல்லா நிறுவகங்களிலும் அத்துடன் 15 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளினாலும் அல்லது ஏதேனும் தாபனத்தினாலும், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நெறிகளுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும்.

நீக்கத்துக்கு எதிரான மேன் முறையீடுகள்.

**21.** ஏதேனும் நிறுவகம், ஆள், அல்லது தாபனமானது 20 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழான பதிவை இல்லாதாக்குவதற்கான கட்டளைத் தேதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள், ஏதேனும் சட்டப்பிரச்சனைமீது மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம். அத்துடன் மேன்முறையீடு செய்யப்பட்டவிடத்து, அத்தகைய நிறுவகத்தின், ஆளின் அல்லது தாபனத்தின் பதிவு அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை இடை நிறுத்தி வைக்கப்படல் வேண்டும்.

## அத்தியாயம் IV

### இணை உரிமைப் பட்டங்கள்

இணையுரிமைப் பட்டம்.

**22.** ஏதேனும் அபிவிருத்தித் திட்டமானது, குறித்துரைக்கப்பட்ட ஏவையேனும் கல்வித் துறைகளில், 23 ஆம், 24 ஆம் பிரிவுகளின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவகத்தினால் இணை உரிமைப்பட்டங்கள் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

உயர் படிப்பு நிறுவகங்களினால் இணையுரிமைப் பட்டங்கள் அளிக்கப்படுதல்.

**23.** (1) வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகை உள்ளது எது எப்படியிருப்பினும், உயர்படிப்பு நிறுவகம் எதுவும், ஏதேனும் அபிவிருத்தித் திட்டத்துக்கு இணங்கவும் அத்துடன் இயைபான அமைச்சர் எவரும் இருப்பின், அவரினதும், அமைச்சரினதும் அங்கீகாரத்துடனும், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட படிப்புத் துறைகளில் இணை உரிமைப்பட்டங்களை அளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இணை உரிமைப்பட்டங்கள் அளிக்கத் தத்துவம் பெற்ற உயர்படிப்பு நிறுவகம் எதுவும், 25 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) இணை உரிமைப் பட்டங்களை அளிப்பதற்கு அவசியமான பரீட்சைகளையும் வேறு நிபந்தனைகளையும் குறித்துரைக்கும் விதிகளை ஆக்குதல் ;

(ஆ) இணை உரிமைப் பட்டங்களை அளிப்பதற்கு இட்டுச்செல்லும் கற்கை நெறிகளை நடாத்தும் நோக்கத்திற்கென, இணைக்கப்பட்ட கல்லூரிகளைப் பதிவுசெய்தல் ;

(இ) இணை உரிமைப் பட்டங்களை அளிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட தராதரத்தினை பதிவுபெற்ற இணைக்கப்பட்ட கல்லூரிகளின் மாணவர்கள் பெற்றிருக்கிறார்களா என்பதை நிச்சயப்படுத்தும் நோக்கத்திற்காகப் பரீட்சைகளை நடாத்துதல் ; அத்துடன்

(ஈ) பந்தி (அ) வின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளையும் நிறைவுசெய்தவர்களும் தேவைப்படுத்தப்பட்ட பரீட்சைகளில் சித்தியெய்தியவர்களுமான அத்தகைய மாணவர்களுக்கு இணைஉரிமைப் பட்டங்களை அளித்தல்.

இணைபுரிமைப் பட்ட நிறுவகங்கள்.

24. (1) அமைச்சரானவர், ஏதேனும் அபிவிருத்தித்திட்டத்துக்கிணங்க, அதனகத்து குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய படிப்புத் துறைகளில் இணை உரிமைப் பட்டங்களை அளிக்கும் நோக்கத்துக்கென உயர் படிப்பு நிறுவகம் தவிர்ந்த நிறுவகம் எதனையும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், இணை உரிமைப்பட்ட நிறுவகமொன்றாக அங்கீகரிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையானது—

(அ) நிறுவகத்தின் பெயரையும் மகுடப்பெயரையும் ;

(ஆ) நிறுவகத்தின் இலச்சினையையும் ;

(இ) நிறுவகத்தைத் தாபிப்பதற்காக மனுச்செய்கின்ற ஆளையும் ;

(ஈ) அத்தகைய நிறுவகத்தினால் அளிக்கப்படக்கூடியவாறானதும் வழங்கப்படக்கூடியவாறானதுமான அத்தகைய கல்வித் துறைகளில் போதனைக்கு ஏற்பாடு செய்யவும் ;

(உ) நிறுவகத்தின் கட்டமைப்பினையும்.

குறித்துரைத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தத்துவங்களோடு, மேலதிகமாக, நிறுவகமொன்று—

(அ) மாணவர்களைப் பதிவுசெய்யவும் அத்துடன் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய கல்வித் துறைகளில் போதனைக்கு ஏற்பாடு செய்யவும் ;

(ஆ) நிறுவகத்தின் அதிகார சபையும் அதன் தத்துவங்களும், நிறுவகத்தின் பிரதான கல்விசார் மற்றும் நிர்வாக அலுவலர்களின் பதவி மகுடப் பெயரும் அத்துடன் அவர்களின் தத்துவங்களும் பணிகளும், நிறுவகத்தின் கல்விச்சபையும் அதன் அமைப்பும் மற்றும் அவற்றின் தத்துவங்களும், அத்துடன் இணை உரிமைப்பட்டங்களை வழங்குவதற்கு அவசியமான பரீட்சைகள் மற்றும் வேறு நிபந்தனைகள் என்பனவற்றைக் குறித்துரைக்கும் விதிகளை ஆக்குவதற்கும் ;

(இ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய கல்வித் துறைகளிலான கற்கை நெறிகளில் தேர்ச்சி பெற்றுள்ளவர்களான மாணவர்களை நிச்சயித்துக்கொள்ளும் நோக்கத்திற்காகப் பரீட்சைகளை நடாத்துவதற்கும் ;

(ஈ) கட்டளைக்கு இணங்க, உட்பிரிவு (ஆ) என்பதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளையும் நிறைவேற்றியுள்ளதோடு தேவைப்பட்ட பரீட்சைகளில் சித்தியெய்தியுமுள்ள அத்தகைய மாணவர்களுக்கு, இணை உரிமைப் பட்டங்களை அளிக்கவும் வழங்கவும் ;

(உ) நிறுவகத்தின் நிருவாகத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணியாட்டொகுதியினரை வேலைக்கமர்த்துவதற்கும் ; அத்துடன்

(ஊ) நிறுவகத்தின் பணியாடொகுதியினரினதும், மாணவர்களினதும் நலன்களுக்கு அவசியமான அத்தகைய வேறு செயல்களைச் செய்வதற்கும்,

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இணை உரிமைப் பட்டக் குழு.

25. (1) (இதனகத்துப் பின்னர் ' குழு ' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவின் இணை உரிமைப்பட்டக் குழுவொன்று தாபிக்கப்படல் வேண்டும். இக்குழு, பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஆணைக்குழுவின் தவிசாளர், இவர் குழுவின் தவிசாளராயிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள் ;

(இ) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர் ; அத்துடன்

(ஈ) தேசிய கல்வி நிறுவகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்.

(2) குழுவினது உறுப்பினர்கள் நான்கு வருடங்கள் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு முன்னதாக அதனகத்து வழங்கப்படும் கல்வி வசதிகள் உட்பட அத்தகைய நிறுவகம் தொடர்பிலான அறிக்கையொன்றைக் குழுவிடமிருந்து பெறுதல் வேண்டும்.

(4) பின்வரும் தத்துவங்களைக் குழுவானது பிரயோகித்தல் வேண்டும் :—

(அ) இணை உரிமைப் பட்டமொன்றை அளிப்பதற்கு இட்டுச் செல்லும் கற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானித்தல் ;

(ஆ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிப்புத் துறைகளில் கற்கை நெறிகளாக இருக்கின்றவையும் ஒவ்வொரு நிறுவகத்திலும் வழங்கக்கூடியதுமான கற்கை நெறிகளைத் தீர்மானித்தலும், அத்துடன் அத்தகைய கற்கை நெறிகளைப் பயின்ற மாணவர்கள் அவற்றில் தேர்ச்சியைப் பெற்றுள்ளார்களா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு நடாத்தப்படவேண்டிய பரீட்சைகளைத் தீர்மானித்தலும் ;

(இ) அத்தகைய நிறுவகங்களில் நடாத்தப்படுகின்ற வெவ்வேறு கற்கைநெறிகள் தொடர்பில், அத்தகைய ஒவ்வொரு நிறுவகத்திலும் வருடாந்தம் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையை ஏதேனும் அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்க காலத்திற்குக்காலம் தீர்மானித்தல் ;

(ஈ) அத்தகைய நிறுவகங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் தகைமைகளைத் தீர்மானித்தல் ; அத்துடன்

(உ) அத்தகைய நிறுவனங்களில் ஏற்பாடு செய்யப்படவேண்டிய வசதிகளையும் பேணப்படவேண்டிய கல்வித் தராதரங்களையும் தீர்மானித்தல்.

(5) இப்பிரிவின் நோக்கத்திற்காக "நிறுவனம்" என்பது உயர் படிப்பு நிறுவனம், இணைஉரிமைப்பட்ட நிறுவனம் மற்றும் இணைந்த கல்லூரிகள் என்பவற்றை உள்ளடக்கும்.

24 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை இல்லாதொழித்தல்.

26. (1) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் விதப்புரையின்மேல், 24 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை இல்லாதொழிக்கலாம்.

(2) ஆணைக்குழுவானது பின்வருவனவற்றுள் ஏதேனும் ஓர் ஏதுவின் மேல் அல்லது அதற்கு மேற்பட்ட ஏதுக்களின்மேல், ஏதேனும் இணை உரிமைப்பட்ட நிறுவகம் தொடர்பான அத்தகைய ஏதேனும் கட்டளை இல்லாதொழிக்கப்படுவதற்கு விதந்துரைக்கலாம் :

(அ) தேசியக் கொள்கையை மீறிச் செயற்படுதல் ;

(ஆ) இயைபான அபிவிருத்தித் திட்டத்துடன் இசைந்தொழுகத் தவறுதல் ;

(இ) 24 ஆம் பிரிவின்கீழ் சுமத்தப்பட்ட ஏதேனும் நிபந்தனையை மீறுதலுடன், அத்தவறுகையின் விளைவாக—

(i) அத்தகைய நிறுவகத்தில் கல்வி அளிப்பதற்கான வசதிகள் போதியதாயில்லாது இருத்தல் ; அல்லது

(ii) நிறுவகத்தினது கல்வி, மூன்றும் நிலைக்கல்வி தொடர்பில் தேசிய நலனுடன் அல்லது தேசிய கல்விக் கொள்கைகளுடன் காத்திரமுள்ளவாறு இசையாது இருத்தல் ;

(ஈ) இணையுரிமைப் பட்டங்களை வழங்குவதற்காகப் பரீட்சையை நடாத்தத் தவறுதல் அல்லது பரீட்சைகளைத் தகாத முறையில் நடாத்துதல் ; அத்துடன்

(உ) கல்விசார் செயற்பாட்டின் சீர்குலைவுக்கு இட்டுச் செல்லும் நிறுவகத்தின் பிறழ் முகாமை.

(3) (அ) இணை உரிமைப் பட்ட நிறுவகம் ஒன்று தொடர்பாக ஒரு விதப்புரையை ஆக்க முன்னர் ஆணைக்குழுவானது நிறுவகத்திற்கு அனுப்பப்படும் அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறன அத்தகைய காலத்திற்குள், அத்தகைய நிறுவகம் தொடர்பாக, 24 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை இல்லாதொழிக்கின்றதான விதப்புரை ஏன் அமைச்சருக்கு செய்யப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அந் நிறுவகத்தை தேவைப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) நிறுவகம் அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் காரணம் காட்டத் தவறுகின்றவிடத்து அல்லது ஆணைக்குழுவின் திருப்திக்கு காரணம் காட்டத் தவறுகின்றவிடத்து, அத்தகைய நிறுவகம் தொடர்பாக 24 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை இல்லாதொழிப்பது பற்றி ஆணைக்

குழுவானது அமைச்சருக்கு விதப்புரை செய்தல் வேண்டும். ஆணைக்குழு அத்தகைய விதப்புரையின் பிரதி ஒன்றினை அத்தகைய நிறுவகத்திற்கு அனுப்பி வைக்கச்செய்தலும் வேண்டும்.

(4) அமைச்சரானவர், விதப்புரையைப் பெற்றுக்கொண்டதன்மேல், ஆறு வாரங்கள் கழிந்ததன் பின்னர், 27 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் சொல்லப்பட்ட கட்டளையை இல்லாதொழிக்கலாம்.

(5) அமைச்சரானவர் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது—

(அ) 27 ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்படாதுள்ளவிடத்து, எக்காலத்திற்குள் அத்தகைய மேன்முறையீட்டு ; நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்படலாமோ, அக்காலம் முடிவடைந்ததன்மேல் ; அல்லது

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடானது செய்யப்பட்டுள்ளவிடத்து ஆணைக்குழுவின் விதப்புரையை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதிப்படுத்துவதன்மேல்,

26 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்கலாம்.

இல்லாதொழித்தலுக்கு எதிரான மேன்முறையீடு.

27. (1) இருபத்தாறும் பிரிவின் கீழ் செய்யப்பட்ட விதப்புரையினால் இன்னலுறும் நிறுவகமொன்று, ஆணைக்குழுவினால் அத்தகைய விதப்புரை செய்யப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குள், ஏதேனும் சட்டப் பிரச்சினைமீது மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம் ; அத்துடன் 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய மேன்முறையீடு தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

## அத்தியாயம் V

### நானாவிதமானவை

ஒழுங்குவிதிகள்.

28. (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின் இப்பாகத்தினால் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டிருக்கின்றதோ, அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டுமென்பதுடன், அது அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர், வசதியான அளவு விரைவில் பாராளுமன்றத்தின் முன்பு அங்கீகாரத்துக்காகக் கொணரப்படல் வேண்டும். அவ்விதம் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியில் இருந்து, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு, கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**பணிப்பாளர் தலைமையதிபதி நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தல்.**

29. (1) பணிப்பாளர் தலைமையதிபதியானவர்—

(அ) ஏதேனும் மூன்றும் நிலைக் கல்விப் பாடநெறி அல்லது தொழிற் கல்விப் பாடநெறி 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படாத நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற போதி லெல்லாம்; அல்லது

(ஆ) எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் தாபனத்தினால் 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படாமல் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாடநெறி நடாத்தப்படுகின்ற போதிலெல் லாம்; அல்லது

(இ) பதினாறும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்படாமல் ஏதேனும் பரீட்சை எவரேனும் ஆளினால் அல்லது தாபனத்தி னால் நடாத்தப்படுகின்ற போதிலெல்லாம்; அல்லது

(ஈ) இருபத்திநான்காம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் அங்கிகரிக்கப்பட்ட நிறுவகம் ஒன்றல்லாத ஏதேனும் நிறுவகத்தினால் ஏதேனும் இளை உரிமைப்பட்டம் வழங்கப்படுகின்ற போதிலெல்லாம்,

(3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் கட்டளை ஒன்றிற்காக நீதிமன் றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) (அ) பதினாலாம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் நிறுவகம் பதிவு செய்யப்படவில்லையென்ற பயன்பட; அல்லது

(ஆ) பதினைந்தாம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் குறித் துரைக்கப்பட்ட பாடநெறி பதிவு செய்யப்படவில்லையென்ற பயன்பட; அல்லது

(இ) பதினாறும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் பரீட்சை பதிவு செய்யப்படவில்லையென்ற பயன்பட; அல்லது

(ஈ) இளை உரிமைப்பட்டங்களை அளிப்பதற்கு ஏதேனும் நிறுவகம் 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் அங்கீகரிக்கப்படவில்லையென்ற பயன் பட,

பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் ஏதேனும் சான்றிதழ் அதில் கூறப்பட்டிருக்கும் நிகழ்வு பற்றிய முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

(3) நீதிமன்றமானது விசாரணைக்குப் பின்பு—

(அ) ஏதேனும் மூன்றும் நிலைக்கல்விப் பாடநெறி அல்லது தொழிற் கல்விப் பாடநெறியொன்று, 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படாத ஏதேனும் நிறுவகத்தினால் நடாத்தப்படு கின்றது என; அல்லது

(ஆ) எவரேனும் ஆளினால் அல்லது தாபனத்தினால் 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படாமல் ஏதேனும் குறித்து ரைக்கப்பட்ட பாடநெறி நடாத்தப்படுகின்றது என; அல்லது

(இ) பதினாறும் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படாமல் ஏதேனும் பரீட்சை எவரேனும் ஆளினால் அல்லது தாபனத்தினால் நடாத்தப்படுகின்றது என; அல்லது

(ஈ) இருபத்தினான்காம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் நிறுவகத்தினால் ஏதேனும் இணை உரிமைப்பட்டமானது வழங்கப்படுகிறது என,

திருப்திப்பட்டதன் மேல்,—

(i) உட்பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவகத்தை முகாமை செய்கின்ற எவரேனும் ஆளை ஏதேனும் மூன்றும் நிலைக் கல்விப்பாட நெறியை அல்லது தொழிற் கல்விப் பாடநெறியை நடாத்துவதிலிருந்து; அல்லது

(ii) உட்பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளை அல்லது ஏதேனும் தாபனத்தை முகாமை செய்கின்ற எவரேனும் ஆளை குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாடநெறியை நடாத்துவதிலிருந்து; அல்லது

(iii) உட்பந்தி (இ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய பரீட்சையை எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் தாபனத்தை முகாமை செய்கின்ற எவரேனும் ஆள் நடாத்துவதிலிருந்து; அல்லது

(iv) உட்பந்தி (ஈ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவகத்தை முகாமை செய்கின்ற எவரேனும் ஆளை, சொல்லப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் தோதான ஏதேனும் இணை உரிமைப் பட்டத்தை வழங்குகின்றதிலிருந்து,

தடை செய்யும் கட்டளையொன்றினை ஆக்குதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமை அதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்று நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும்வரை, 14 ஆம், 15 ஆம், 16 ஆம் மற்றும் 24 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் மீறப்படுவதைத் தடைசெய்வதற்கு ஏதேனும் இடைக்காலக் கட்டளை ஒன்றுக்காக, நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம். அத்துடன், நீதிமன்றமானது, அத்தகைய நோக்கத்திற்கு அது தகுந்ததெனக் கருதும் அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

**குறித்த சில நிறுவகங்களுக்குப் பதிவுசெய்யப்படுவதிலிருந்து விலக்களித்தல்.**

30. (1) அமைச்சர், ஏதேனும் நிறுவகம் அல்லது நிறுவகங்களின் வகுதி எதுவும் இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படுவதிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) அமைச்சரானவர், 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நிறுவகங்கள் பதிவு செய்யப்படுவதற்கு அல்லது 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பரீட்சைகள் பதிவு செய்யப்படுவதற்கு ஏதேனும் இடைக்கால ஒழுங்குவிதி மூலம் விதித்துரைக்கலாம். அத்துடன். அத்தகைய ஒழுங்குவிதியானது இச்சட்டம் தொடங்கியதிலிருந்து அல்லது இயைபான அபிவிருத்தித் திட்டம் வெளியிடப்பட்டதிலிருந்து, இதில் எது முந்தியதோ அதிலிருந்து மூன்றாண்டுகாலப் பகுதியொன்றை விஞ்சாதவொரு காலப் பகுதிக்குப் பயனுறுதல் வேண்டும்.

31. அமைச்சரானவர், பாராளுமன்றச் சட்டமொன்றினால் தாபிக்கப்பட்டதும், அதன் குறிக்கோள்களாக எவையேனும் உயர்தொழில்கள் தொடர்பில் மூன்றாம் நிலைக்கல்வியும் சான்றிதழும் வழங்குகின்றதுமான நியதிச் சட்டக் குழுவெதற்கும், அது வழங்குகின்றதான கல்வியும், அதனால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளும், போதுமான தரமுடையதாயும், அத்துடன் தேசியக் கொள்கைக்கு இணங்க இருப்பதாயும் அமைச்சர் திருப்திப்படுகின்றவிடத்து, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை ஒன்றின் மூலம் 14 ஆம், 16 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம். குறித்த சில நியதிச்சட்டக் குழுக்களுக்கு 14 ஆம், 16 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளிலிருந்து விலக்களித்தல்.

32. (1) ஆணைக்குழு, காலத்துக்குக்காலம் சனாதிபதிக்கும் மற்றும் அமைச்சருக்கும் அபிவிருத்தித் திட்டத்துக்குப் பயன் கொடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி அறிக்கை செய்தல் வேண்டும். ஆணைக்குழு அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தல்.

(2) ஆணைக்குழுவானது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர், ஆறுமாதகாலப் பகுதியொன்று முடிவடையுமுன்னர், அவ்வாண்டின் போதான அதன் செயற்பாடுகள் பற்றிய முழு விபரத்தைத் தருகின்ற அறிக்கையொன்றினை அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். அமைச்சர் அதன் பிரதிகளை பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கச் செய்வித்தல் வேண்டும்.

33. இச்சட்டத்தின் ஏற்பாடுகள்— இச்சட்டம் ஏற்புடையதாதலில் இருந்து விலக்களித்தல்.

(அ) 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, கொத்தலாவலை பாதுகாப்புக் கல்விக் கழகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கொத்தலாவலை பாதுகாப்புக் கல்விக் கழகம் தொடர்பில்; அத்துடன்

(ஆ) 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் தொடர்பில் ; அத்துடன்

(இ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பில்,

ஏற்புடையதாதல் ஆகாது.

34. (184 ஆம் அத்தியாயமான) கல்விக் கட்டளைச்சட்டத்தின் பாகம் IV பொது (இ) பிரிவு 37 உட்பிரிவு (2) என்பது இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது. கல்விக் கட்டளைச் சட்டத்தின் குறித்த சில பிரிவுகளை நீக்குதல்.

35. இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய— பொருள் கோடல்.

"இணை உரிமைப்பட்டம்" என்பது,

(அ) பல்கலைக்கழகமொன்றில் அல்லது அதே போன்ற நிறுவகமொன்றில் தொடர்ந்து படிக்கும் நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட ; அல்லது

(ஆ) செய்தொழில் ஒன்றில் ஈடுபடும் நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட,

குறித்துரைக்கப்பட்டதான படிப்புத் துறையில் ஆகக் குறைந்தது இரண்டாண்டுப் பயிற்சியைப் பூர்த்தி செய்ததன்மேல் பட்டமொன்றாக, "இணை உரிமை" என்ற மகுடப் பெயரில் அளிக்கப்படும் மூன்றும் நிலைக் கல்விப் பட்டம் ஒன்றெனப் பொருள்படும்; அத்துடன்

"கல்வி" என்பது, பயிற்சியையும் உள்ளடக்கும்.

## பாகம் II

### அத்தியாயம் VI

### தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையைத் தாபித்தல்

தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையைத் தாபித்தல்.

36. (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" என இப்பாகத்தில் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை என அழைக்கப்படவேண்டிய அதிகாரசபை யொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது, 39 ஆம் பிரிவின் கீழ் அப்போதைக்கு அவ் அதிகாரசபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினல் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும் என்பதுடன் இடையரு வழியுரிமையையும் ஒரு பொது இலச்சினையையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அதன் பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

அதிகார சபையின் குறிக்கோள்கள்.

37. அதிகார சபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) தொழிற் பயிற்சியை திட்டமிடல், ஒழுங்கமைத்தல் மற்றும் வழங்குதல்;

(ஆ) தொழிற் பயிற்சி தொடர்பான தரங்களைக் குறித்துரைத்தல்;

(இ) தொழிற் பயிற்சி தொடர்பாகப் பரீட்சைகளை நடாத்தி சான்றிதழ்களையும் மற்றும் வேறு விருதுகளையும் வழங்குதல்;

(ஈ) தேசிய தொழிற் சோதனையை நடாத்துதல்;

(உ) தொழிற் பயிற்சியில் ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் நடாத்துதல்;

(ஊ) பல்வேறு திறமைகளின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குப் போட்டிகளை நடாத்துதல்;

(எ) தொழிற் பயிற்சியை வழங்கும் தாபனங்களினதும் மற்றும் நிறுவனங்களினதும் பயிற்சி வழங்கும் திறன்களை அபிவிருத்தி செய்தல்;

(ஏ) தொழிற்பயிற்சி தொடர்பில் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை அளித்தல்; அத்துடன்

(ஐ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள நிறுவனங்களுடன் இணைப்பு வைத்திருத்தலும் இணையொத்த பாடங்களிலும் நெறிகளிலும் ஆன சான்றிதழ்களேனும் டிப்புளோமாக்களேனும் பட்டங்களேனும் சமனாக வைத்திருத்தலும் அவற்றைச் செல்லுபடியாக்குதலும்.

38. அதிகாரசபையானது, பின்வரும் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிக்கலாம் :— அதிகாரசபையின் தத்துவங்கள்.

(அ) எத்துறைகள் அமைச்சரால் அங்கீகாரமளிக்கப்பட்டிருக்கின்றனவோ அத்துறைகளில் தேசிய தொழிற் சோதனைகளை நடாத்துதல் ;

(ஆ) தொழிற்பயிற்சி தொடர்பில் போதனாசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல், அத்துடன், அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியைக் கட்டுப்படுத்துதல் ;

(இ) மூன்றும் நிலைக்கல்வி மட்டத்திலுள்ள எல்லா நிறுவகங்களிலும் பொறித்தொகுதித் தொழிற் பயிற்சியை வழங்குதல் ;

(ஈ) பொறித்தொகுதித் தொழிற்பயிற்சிக்காக பயிற்சித்திட்டத்தைத் தயாரித்தல் ;

(உ) பயிற்சி அளிக்கும் தாபனங்களின் பயிற்சி வழங்கும் திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறான அத்தகைய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் ;

(ஊ) ஏதேனும் தொழிற்பயிற்சி நிலையத்தை அல்லது நிறுவகத்தை அமைச்சரின் அங்கீகாரத்துடன் தாபித்து முகாமை செய்தல் ;

(எ) ஏதேனும் விடயத்தில் அமைச்சரால் பணிக்கப்படும்போது அவருக்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஏ) பயிலுநர்கள் உட்பட பல்வேறு வகுதிகளையும் சேர்ந்த பயிற்சியாளர்களைத் தீர்மானித்தல்; அத்துடன்

(ஐ) அதிகாரசபையின் அபிப்பிராயத்தில், குறிக்கோள்களைத் தகுந்த முறையில் கொண்டுநடாத்துவதை அல்லது அதன் கடமைகளைத் தகுந்த முறையில் புரிவதை வசதிப்படுத்துவதற்கு அவசியமான அத்தகைய வேறு எல்லாக் காரியங்களையும் செய்தல்.

39. (1) அதிகாரசபையானது அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— அதிகாரசபையின் அமைப்பு.

(அ) தவிசாளர் ஒருவர் ;

(ஆ) துணைத் தவிசாளர் ஒருவர் ;

(இ) (இதனகத்துப் பின்னர் "பதவிவழி உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் தலைமையதிபதி; அத்துடன்

(ஈ) (i) அரச நிறுவனங்கள் தொழிற் சங்கங்கள், வர்த்தகம் மற்றும் கைத்தொழிலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ; அல்லது

(ii) தொழிற் பயிற்சி தொடர்பான விடயங்களில் அனுபவமும் விசேட அறிவும் கொண்டிருக்கும்,

பன்னிரண்டுக்கு மேற்படாத வேறு உறுப்பினர்கள்.

(2) பதவிவழி உறுப்பினர் தவிர்ந்த அதிகாரசபையின் உறுப்பினர்கள் எல்லோரும் நான்கு வருட காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) தவிசாளரும், துணைத் தவிசாளரும் அதிகாரசபையில் அவர்களுக்கு கையளிக்கப்படுகின்றவாறான அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(4) அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமானது எனக் கருதினால், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் பதவிவழி உறுப்பினர்கள் தவிர்ந்த அதிகார சபையின் எவரேனும் உறுப்பினரை பதவியில் இருந்து அகற்றுவதற்கான காரணம் எதுவும் காட்டாது, அவ்வாறு பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன், அத்தகைய அகற்றுகையானது எந்நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலும் ஆகாது.

(5) அதிகார சபையின் எவ் உறுப்பினர் தொடர்பாக (4) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்று அமைச்சரினால் ஆக்கப்படுகின்றதோ, அவ்வுறுப்பினர் அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று அவரது பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(6) அதிகாரசபையின் பதவிவழி உறுப்பினர் தவிர்ந்த வேறு எவரேனும் உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட அப்பயன்கொண்ட கடிதமூலம் எந்நேரத்திலும் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகலானது அக்கடிதம் அமைச்சரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(7) அதிகாரசபையின் பதவிவழி உறுப்பினர் தவிர்ந்த எவரேனும் உறுப்பினர் இறக்கின்றவிடத்து, பதவியிலிருந்து விலகுமிடத்து அல்லது பதவியில் இருந்து அகற்றப்படுமிடத்து, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு அவ்வாறு இறக்கின்ற, பதவி விலகுகின்ற அல்லது பதவியில் இருந்து அகற்றப்படுகின்ற அத்தகைய உறுப்பினரின் இடத்தில் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கு அமைச்சர் வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம். அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு நியமிக்கப்படும் ஆள் எவரும், அவர் எந்த உறுப்பினரை அடுத்துப் பதவிக்கு வருகின்றாரோ, அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியிருக்கும் பாகத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

*வெற்றிடமொன்றிருப்பதன் காரணமாகச் செயல் வலிதற்றதாகக் கப்படுதலாகாது.*

40. அதிகாரசபையின் வழக்கு நடவடிக்கை அல்லது செயல் எதுவும் அதிகார சபையின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் குறைபாடு ஒன்று இருப்பதன் காரணமாக மட்டும் வலிதற்றதானதாகக் கருதப்படுதலாகாது.

*அதிகார சபையின் இலச்சினை.*

41. (1) அதிகாரசபையின் இலச்சினை, அதிகாரசபைத் தவிசாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் அது மாற்றவும்படலாம்.

(2) அதிகாரசபையின் இலச்சினையைப் பொறித்தலானது, அதிகார சபையின் தவிசாளரினதும் அத்துடன் இலச்சினை பொறிக்கப்பட்டதை உண்மையென்று உறுதிப்படுத்துவதற்கு அதிகார சபையினால் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரசபையின் வேறு எவரேனும் அலுவலரினதும் கையொப்பத்தினால் உண்மையென்று உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

42. (1) அதிகாரசபையின் கூட்டங்கள், ஆகக்குறைந்தது ஒவ்வோர் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை நடாத்தப்படுதல் வேண்டும். அதிகார சபையின் கூட்டங்கள்.

(2) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண், அதற்கென ஆக்கப்பட்ட விதிகளின்படி அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு இருத்தல் வேண்டும்.

(3) தவிசாளர், அல்லது அவர் சமுகமாயிராதபோது துணைத் தவிசாளர் அல்லது இவ்விருவரும் சமுகமாயிராதபோது சமுகமாயிருக்கும் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினரொருவர் அதிகார சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும்.

(4) அதிகார சபையின் கூட்டமெதிலும் முடிவு எடுப்பதற்கான எல்லா விடயங்களும், சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குக் கொண்டு முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமனாயிருக்கின்ற விடயத்தில் தலைமைதாங்கும் அலுவலருக்கு அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக அதிகார சபையின் கூட்டங்கள், அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, அத்துடன் கையாளப்படவேண்டிய விடயங்கள் என்பன தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படலாம்.

43. அமைச்சர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதிகாரசபையின் உறுப்பினர்களுக்குக் கொடுபடற்பாலதான ஊதியத்தை தீர்மானித்தல் வேண்டும். அதிகார சபையின் உறுப்பினர்களின் ஊதியம்.

44. அதிகாரசபையானது, அமைச்சர் அத்துடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஆகிய இருவரினதும் ஒருப்பாட்டுடன் அல்லது அதேபோன்ற ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, அதிகாரசபையின் கடப்பாடுகளைச் சமாளிப்பதற்கும் அத்துடன் இச்சட்டத்தின் கீழ் தத்துவங்களை, பணிகளை அல்லது கடமைகளைப் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் அல்லது புரிவதற்கும், அதிகாரசபைக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப்பற்றாகவோ அல்லது வேறு வகையாகவோ பெறலாம் அல்லது கலந்துபேசிக் கடனைப் பெறலாம் : அதிகார சபையின் கடன் பெறும் தத்துவங்கள்.

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் எடுக்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் வெளிநிலுவையாகவுள்ள தொகையின் கூட்டு மொத்தமானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை எந்நேரத்திலும் விஞ்சுதல் ஆகாது.

45. (1) அதிகாரசபையானது அதன் பணிகளை நிறைவேற்றுவதில் அதிகாரசபைக்கு உதவிசெய்யவெனக் குழுக்களைத் தாபிக்கலாம். அத்தகைய குழு எதனதும் உறுப்பினர்கள் அதிகாரசபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அதிகாரசபையின் குழுக்கள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட குழு எதற்கும், அதிகாரசபை அதன் பணிகளுள் எதனையும் கையளிக்கலாம். ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கையளிப்பானது, அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் பணியை, அதிகாரசபை நிறைவேற்றுவதிலிருந்து தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது. அல்லது பொருள் கொள்ளப்படுதலாகாது. அத்தகைய கையளிப்பின் விளைவாக, குழு எதனாலும்செய்யப்படும் முடிவு எதனையும் திருத்துவதற்கோ அல்லது இல்லாதொழிப்பதற்கோ, அதிகாரசபை தத்துவமுடையதாயிருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் குழுவின் உறுப்பினர்கள், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தையும் படிகளையும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து பெறலாம்.

**அமைச்சரின் பணிப்புரைகள்.**

46. (1) அமைச்சரானவர், தொழிற் பயிற்சிமீதான பொதுக்கொள்கை தொடர்பிலும் அத்துடன் இயைவுள்ளனவென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு விடயங்கள் தொடர்பிலும் அதிகாரசபைக்குப் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளைக் காலத்துக்குக்காலம் வழங்கலாம், என்பதுடன் அத்தகைய பணிப்புரைகளுடன் இணங்கி ஒழுகுதல் அதிகாரசபையின் கடமையாதலும் வேண்டும் :

ஆயின், அமைச்சரானவர், வேறு எவரேனும் அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களை அல்லது பணிகளைப் பாதிக்கும் ஏதேனும் விடயம் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்புரைகளை வழங்குகையில், அவ்வமைச்சரின் கலந்தாலோசனையுடன் செயலாற்றுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் பணிப்புரைகள், இச்சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு இசைவாக இருத்தல் வேண்டும்.

**பிரதான நிறைவேற்று அலுவலர்.**

47. அதிகாரசபையின் தவிசாளர், அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும்.

**அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நியமனம் செய்வது அத்துடன் அவர்களது பயிற்சி தொடர்பான அதிகாரசபையின் தத்துவங்கள்.**

48. (1) அதிகாரசபையானது, அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும், அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம்.

(2) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதிகாரசபையானது—

(அ) அதிகாரசபையின் பணியாட்டொகுதியினரை நியமிக்கலாம், பதவி நீக்கம் செய்யலாம், மற்றும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டினைப் பிரயோகிக்கலாம்;

(ஆ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் வேதனங்களை அல்லது சம்பளத்தை அல்லது வேறு ஊதியத்தினை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்;

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் நன்மைக்காக சகாயநிதியமொன்றை அல்லது செயற்றிட்டம் ஒன்றைத் தாபித்து ஒழுங்குபடுத்தலாம், என்பதுடன் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க,

ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட நியதிகளிலும்பார்க்க அனுகூலம் குறைந்தன வல்லாத நியதிகளின்மீது உதவுதொகைகளை அத்தகைய நிதியத்திற்கு அல்லது செயற்றிட்டத்திற்கு வழங்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள எல்லா கருமங்கள் தொடர்பாகவும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படலாம்.

**அதிகாரசபையின் பணியாட்தொகுதிக்கு வேறு சேவைகளில் இருந்து அலுவலர்களை நியமித்தல்.**

49. (1) அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் சம்மதத்துடன், அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது, அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு, பகிரங்க சேவையிலிருக்கும் அலுவலர்கள் எவரும் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச்சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறிப்பிட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்தில் சேவை செய்வதென்று அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தமொன்றின்மூலம் உடன்பட்டிருக்கின்ற ஆளெவரையும், அதிகாரசபை ஊழியத்தில் அமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்குப் புரியப்படும் சேவைக் காலப் பகுதியெதுவும், அத்தகைய ஒப்பந்தத்துக்கான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்குச் செய்யப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**பரிசோதகரை நியமித்தல்.**

50. (1) அதிகாரசபையானது, அதன் அலுவலர் அல்லது சேவையாளர் எவரையும், பெயர்குறித்தோ அல்லது பதவி குறித்தோ இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பரிசோதகராக நியமிக்கலாம்.

(2) ஒவ்வொரு பரிசோதகருக்கும் பரிசோதகருக்கான நியமனச் சான்றிதழொன்று அதிகாரசபையினால் வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய சான்றிதழ், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் தாபனத்துக்குள் இருக்கும்போது, அவ்வாறு தேவைப்பட்டால், தாபனத்தில் இருப்பாட்சியாளருக்கு அல்லது தாபனத்தில் பொறுப்புள்ள முகாமைத்துவப் பதவியொன்று வகிக்கின்ற ஆளுக்குப் பரிசோதகரினால் வழங்கப்படுதலும் வேண்டும்.

பரிசோதகரின் தத்துவங்கள்.

51. (1) அதற்கென ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கமைவாக பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையும் செய்வதற்குப் பரிசோதகர் தத்துவம் உடையவராதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, ஏதேனும் தாபனத்தினுள் அல்லது அதனுடைய பாகத்தினுள் பகலில் அல்லது இரவில் எல்லா நியாயமான நேரங்களிலும் புகுந்து, பரிசோதித்துச் சோதனை செய்தல்;

(ஆ) ஏதேனும் தாபனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எவரேனும் பயிற்சியாளரை சோதனைசெய்தல் அல்லது இச்சட்டத்தைப் பின்பற்றி, அத்தகைய தாபனத்தில் பேணப்படும் ஏதேனும் இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தல் மற்றும் இச்சட்டத்தின் குறிக்கோள்களைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான எவரேனும் ஆளின் ஏதேனும் கூற்றை அந்த இடத்தில் அல்லது வேறுவிதமாக எடுத்தல்;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி அல்லது ஏதேனும் ஒழுங்குவிதிகள் தாபனத்தினுல் பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு தகுதியானதென அவர் நினைக்கும் அத்தகைய சோதனையையும் விசாரணைகளையும் செய்தல் ;

(ஈ) அவரினுல் புலனுய்வு செய்யப்படும் ஏதேனும் விடயம் தொடர்பில், மேற்கூறப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு அவர் உட்புகுந்த வளவுகளில் அல்லது தாபனத்தில் அவர் காணுகின்ற ஆள் ஒவ்வொருவரையும் அல்லது அத்தகைய தாபனத்தில் அவர் ஊழியத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறுர் அல்லது ஊழியத்தில் அமர்த்தப்பட்டிருந்தார் அல்லது இவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் எதனையும் தமது உடைமையில், கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறுர் என அவர் நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றனவான அத்தகைய ஆளை, அவர் தகுதியானதெனக் கருதுகின்றவாறு, தனியாகவோ அல்லது வேறோர் ஆளின் சமுகத்திலோ சோதனை செய்தல்;

(உ) அவரினுல் புலனுய்வுசெய்யப்பட்டுக்கொண்டிருக்கும் ஏதேனும் விடயம் தொடர்பில், (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டிருக்கும் எவரேனும் ஆளை அவரினுல் நிர்ணயிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் தோன்றுமாறு தேவைப்படுத்துதலும், அத்துடன் அவ்விடத்திலேயே அவ்வாளை விசாரித்தலும்; அத்துடன்

(ஊ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தத்துவங்களைப் பிரயோகித்தல்.

(2) ஏதேனும் தாபனத்தின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், அவரது முகவர்கள் மற்றும் சேவையாளர்கள், (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்கு அவசியமானவாறனவையும் பரிசோதகரால் தேவைப்படுத்தப்படுவனவுமான சாதனங்களை அல்லது வசதிகளை எல்லா நேரங்களிலும் கொடுத்துதவுதல் வேண்டும்.

52. அதிகார சபையானது, அதன் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் எவற்றையும் அதிகாரசபையின் அலுவலர் அல்லது சேவையாளர் எவருக்கும் கையளிக்கலாம், அத்துடன் அவ்வாறு கையளிக்கப்படும் அத்தகைய தத்துவம், பணி அல்லது கடமை எதுவும், அதிகாரசபையின் சிறப்பான அல்லது பொதுவான பணிப்புரைகளுக்கமைய, அத்தகைய அலுவலரினால் அல்லது சேவையாளரினால் பிரயோகிக்கப்படல், நிறைவேற்றப்படல் அல்லது புரியப்படல் வேண்டும். அதிகாரசபையின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும், தத்துவங்களை, பணிகளை அத்துடன் கடமைகளைக் கையளித்தல்.

53. (1) (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படல் வேண்டும். அது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :— அதிகாரசபையின் நிதியம்.

(அ) ஏதேனும் ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அல்லது பாராளுமன்றத்தின் தீர்மானத்தினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான திரட்டு நிதியத்தில் இருந்தான அத்தகைய உதவுதொகைகள் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பயிற்சிக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட எல்லாப் பணத்தொகைகள்-;

(இ) வேறு மூலங்களிலிருந்து கிடைக்கும் மானியக் கொடைகள் அல்லது தன்னிச்சையாக வழங்கப்படும் உதவுதொகைகள் ; அத்துடன்

(ஈ) வங்கிகள் அல்லது வேறு மூலங்களிலிருந்து எடுக்கப்பட்ட கடன் பெறுகைகள்.

(2) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) வழங்கப்படும் பயிற்சி தொடர்பில் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் தொழில்தருநரினால் உறப்படும் அங்கீகரிக்கப்பட்ட செலவினம் ; அத்துடன்

(ஆ) அதிகாரசபையின் குறிக்கோள்களைக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கும் அத்துடன் அதன் தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளைப் பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு அத்துடன் புரிவதற்கு அவசியமான வேறு செலவினம்.

(3) அதிகார சபையின் ஆலோசனையின்பேரில் பயிற்சி வழங்குவதற்கு அவசியமானதான இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அமைச்சரால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் செலவினம் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட செலவினமாகக் கருதப்படல் வேண்டும்.

54. அதிகார சபையினால் உறப்பட்ட அல்லது உறப்பட இருக்கும் ஏதேனும் உடனடிச் செலவினத்தைச் சமாளிப்பதற்குத் தேவையல்லாத நிதியத்திலுள்ள எல்லா மேன்மிகைப் பணங்களும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மேல் பொதுத் திறைசேரியில் அதிகாரசபையினால் வைப்பிலிடப்படல் வேண்டும். மேன்மிகைப் பணங்கள்.

அதிகாரசபையின் கணக்குகள்.

55. அதிகாரசபையானது, ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும், அதன் வருமானம் மற்றும் செலவினம் அத்துடன் அதன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

அதிகாரசபையின் நிதியாண்டு.

56. (1) ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பகிரங்க கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும், அதிகாரசபையின் வருடாந்த செயற்பாடுகள் பற்றிய அறிக்கையும் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

57. ஒவ்வோராண்டும், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியினுடைய அறிக்கையையும் பெற்றுக் கொண்டதன்மேல், அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் அத்தகைய அறிக்கையானது அதிகாரசபையின் எந்நிதியாண்டின் போதான செயற்பாடுகள் தொடர்பிலானதோ அந்நிதியாண்டின்போதான அதன் செயற்பாடுகள் பற்றிய அதிகாரசபையின் கூற்றுடன் சேர்த்து அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். அமைச்சர், கணக்குகள், அதிகாரசபையின் எந்நிதியாண்டு தொடர்பிலானவையோ, அந்நிதியாண்டு முடிவடைவதற்குப் பன்னிரண்டு மாதங்களுக்கு முன்னர் அவற்றின் பிரதிகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கச்செய்தல் வேண்டும்.

அபிவிருத்தித் திட்டங்களை ஆக்குமாறு அமைச்சர் ஆணைக்குழுவைப் பணித்தல்.

58. (1) அமைச்சரானவர், இலங்கையில் தொழிற் பயிற்சி அபிவிருத்திக்காக, அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆணைக்குழுவைப் பணிக்கலாம்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தித்திட்டமானது—

(அ) ஆரம்ப பயிற்சிக்கான, இன்னும் மேலதிக பயிற்சிக்கான மற்றும் மீள்பயிற்சிக்கான வழிகாட்டி நெறிக்கு ;

(ஆ) தொழிற்பயிற்சியளிக்கும் நோக்கங்களுக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படவேண்டிய பயிற்சி இடங்களின் எண்ணிக்கைக்கு ;

(இ) வெவ்வேறு வகுதிகள் தொடர்பில் பயிற்சியளிக்கப்படவேண்டிய பயிற்சியாளர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கைக்கு ;

(ஈ) பயிற்சியாளர்களுக்கான பாடத்திட்டங்களைத் தயாரிக்கையில் பின்பற்றப்படவேண்டிய வழிகாட்டி நெறிகளுக்கு ;

(உ) பயிற்சியாளர்களாகத் தெரிவுசெய்யப்படுவதற்கான தகைமைகளுக்கு ;

(ஊ) சான்றிதழ்கள் மற்றும் வேறு தனிச் சிறப்புகளை வழங்குவதற்காக பயிற்சியாளர்களைச் சோதிக்கும் அத்துடன் பரீட்சிக்கும் விதத்துக்கு ;

(எ) பணியாட்டொகுதியினரின் தகைமைகளுக்கு;

(ஏ) பல்கலைக்கழகங்கள் மற்றும் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவகங்களின் மாணவர்களுக்கான பொறித்தொகுதி பயிற்சி ஏற்பாடுகளுக்கு ;

(ஐ) பல்வேறு வகுதிகளைச் சேர்ந்த பயிற்சியாளர்களினதும் பொதுக் கல்வியையும் அத்துடன் தொழிற்கல்வியையும், விரிவுபடுத்துவதற்கும் அத்துடன் அத்தகைய பொதுக்கல்வி மற்றும் தொழிற் கல்வி வழங்கப்படவேண்டிய விதத்துக்கும்,

ஏற்பாடுசெய்யலாம்.

(3) அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்கச் செயற்படுதல் அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும். அத்துடன், அதிகாரசபை அத்தகைய திட்டத்திற்கு இணங்கிச் செயற்படத் தவறுமிடத்து, ஆணைக்குழுவானது, அமைச்சரின் சம்மதத்துடன் அத்தகைய திட்டங்களுக்கு முரணாக அதிகார சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் அறிவுறுத்தல்களை மீளாய்வு செய்வதற்கான அல்லது திருத்துவதற்கான கட்டளைகளை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய கட்டளைகளுடன் அதிகாரசபை இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(4) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடனும் ஏதேனும் அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்கவும் அதிகாரசபையினால் அளிக்கப்படவேண்டிய சான்றிதழ்களை விதித்துரைத்தல் வேண்டும்.

59. ஆரம்ப பயிற்சியின் குறிக்கோளானது, முறைமையான பயிற்சித்திட்டமூலம், பயிற்சியாளர் எவருக்கும், தான்புரி தொழில் ஒன்றுக்கான பரந்த அளவிலான அடிப்படை முன்பயிற்சியையும், அத்தகைய தான்புரிதொழிலில் ஈடுபடுவதற்கு அவசியமான தொழினுட்ப ஆற்றலையும் அறிவையும் வழங்குவதாக இருத்தல் வேண்டும். ஆரம்பப் பயிற்சி.

60. (1) அமைச்சரானவர், எத் தான்புரிதொழில்கள் தொடர்பில் ஆரம்பப் பயிற்சி வழங்கப்படலாமோ, அத் தான்புரிதொழில்களை, ஒழுங்கு விதிகள்மூலம், காலத்துக்குக் காலம் விதித்துரைக்கலாம். **எத் தான்புரி தொழில் தொடர்பில் ஆரம்பப் பயிற்சி வழங்கப்படலாமோ, அத் தான்புரி தொழில்களை அமைச்சர் விதித்துரைத்தல்.**

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஒழுங்குவிதிகள்—

(அ) (இதனைத் தொடர்ந்து பின்னர், " பயிற்சியாளர் தான்புரிதொழில்கள் " எனக் குறிப்பிடுசெய்யப்படும்) எத் தான்புரிதொழில் தொடர்பில் ஆரம்பப் பயிற்சி வழங்கப்படலாமோ அத் தான்புரிதொழில்களுக்கும் ;

(ஆ) பயிற்சிக்காலத்துக்கும் ;

(இ) பயிற்சியின்போது புகட்டப்படவேண்டிய ஆற்றல்களுக்கும் அறிவுக்கும் ;

(ஈ) படிநிலைகள் மூலம் (அவ்வாறு எவையேனுமிருப்பின்) பயிற்சியளிப்பதற்கும் ;

(உ) பயிற்சி வளவுகளுக்கு வெளியில் பயிற்சியளிப்பதற்கும் ;

(ஊ) பேணப்படவேண்டிய பரீட்சைத் தரங்களுக்கும் ; அத்துடன்

(எ) ஆரம்பப் பயிற்சி வழங்குவதற்கு அவசியமானதும், அதனோடு தொடர்புடையதுமானதென அமைச்சர் அபிப்பிராயப்படுகின்ற அத்தகைய வேறு விடயங்களுக்கும்,

ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, ஒழுங்குவிதிகளுக்கிணங்க, அப்பயிற்சியாளரின் தான்புரி தொழில் தொடர்பான பாடத்திட்டத்தை, நேர அட்டவணையை அத்துடன் ஏதேனும் வேறுவிடயத்தைக் குறித்துரைக்கும் பயிற்சிக் கட்டளைகளை வழங்குதல் வேண்டும்.

(4) பயிற்சியாளர் தான்புரி தொழில் ஒன்றின் ஏற்றங்கீகாரம் அமைச்சரினால் இல்லாதொழிக்கப்பட்டு, ஆனால் ஆரம்பப் பயிற்சிக்கான ஒப்பந்தம் முடிவுறுத்தப்படாதிருக்குமிடத்து, இதுகாலவரை வலுவிலுள்ள ஏற்பாடு அத்தகைய ஒப்பந்தத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

பயிற்சி அளிக்கும் இடங்களுக்கு வெளியே உள்ள நிறுவனங்களில் **ஆரம்பப் பயிற்சியை வழங்குவதற்கான ஏற்பாடு செய்தல்.**

61. (1) பயிற்சியளிக்கப்படும் இடங்களுக்கு வெளியேயுள்ள தகுந்த நிறுவனங்களில் ஆரம்பப் பயிற்சியின் ஒரு பகுதி அளிக்கப்படுவதற்கு அத்தகைய பயிற்சியளிக்கப்படுவதற்கான அத்தகைய ஒழுங்கொன்றானது அவசியமானதும் உகந்ததுமானதென அதிகாரசபை கருதினால், அத்தகைய ஒழுங்கொன்றானது அவசியமானதெனவும் உகந்ததெனவும் அதிகாரசபை கருதுகின்ற அளவுவரை வழங்கப்படுவதற்கு, 60 ஆம் பிரிவின் கீழான பயிற்சிக் கட்டளைகளில் ஏற்பாடுசெய்யப்படலாம்.

(2) அதிகாரசபையானது, இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆரம்ப பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்பட்ட எவரேனும் பயிற்சியாளர்களுக்கு, பொதுவான மற்றும் தொழிற்கல்வி புகட்டுவதற்கு ஏதேனும் நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்று செய்துகொள்ளலாம்.

வழங்கப்பட வேண்டிய பயிற்சியின் **தன்மை.**

62. (1) பயிற்சியாளர்களுக்கான தான்புரிதொழில், ஆரம்பப்பயிற்சி, இயைபான பயிற்சிக் கட்டளைக்கு இணங்கமட்டுமே, கொடுபடல் வேண்டும்.

(2) பயிற்சியாளர் தான்புரி தொழிலொன்று தவிர்ந்த தான்புரி தொழில்களுக்கு ஆரம்பப் பயிற்சியானது, பதினெட்டு வயதுக்குக் குறைந்த இளம் ஆட்களுக்கு, அடுத்துவரும் போதனைநெறிக்கு அவர்களைத் தயார்செய்யமுன்னப்பட்டாலொழிய, அளிக்கப்படலாகாது.

(3) எப்புதிய பயிற்சிமுறைகள் அத்துடன் புதிய தான்புரி தொழில்கள் தொடர்பில் ஆரம்பப் பயிற்சி அளிக்கப்படலாமோ, அப்புதிய பயிற்சிமுறைகளையும் புதிய தான்புரி தொழில்களையும் அபிவிருத்தி செய்யும், அத்துடன் மதிப்பீடுசெய்யும் குறிக்கோளுடன் அமைச்சர், அதிகாரசபையின் ஆலோசனையுடனும் ஆலோசனைக்குழுவின் கலந்தாலோசனையுடனும், எத் தான்புரி தொழில்கள் தொடர்பில் ஆரம்பப் பயிற்சியளிக்கப்படலாமோ, அத் தான்புரிதொழில்களை, 60 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்கலாம்.

பயிற்சியாளர் ஒருவரின் தகைமைகள்

63. இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் பயிற்சியாளர் ஒருவராக ஈடுபடுவதற்கு ஆளொருவர்—

(அ) அவர் பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்டவராக இருப்பாராயின் ; அத்துடன்

(ஆ) குறிப்பிட்ட எப்பயிற்சியாளர் தான்புரி தொழில் அல்லது வேறு ஏதேனும் தான்புரி தொழில் தொடர்பில் பயிற்சியளிக்கப்பட இருக்கின்றதுடன் அவர் அப்பயிற்சியைப் பெறவும் முன்னுகின்றுரோ, அக்குறிப்பிட்ட பயிற்சியாளர் தான்புரி தொழிலின் அல்லது வேறு ஏதேனும் தான்புரி தொழிலின் விடயத்தில், ஏற்புடைத்தானதும் விதித்துரைக்கப்பட்டதுமான கல்வித்தரங்களையும், தேக ஆரோக்கியத்தையும் கொண்டுள்ளார் என அவர் திருப்திப்படுத்தினுலொழிய,

தகைமையுடையவராதலாகாது.

ஒப்பந்தங்கள்.

64. (1) பயிற்சியாளர் ஒருவரை, அத்தகைய பயிற்சியாளருக்கு ஆரம்பப் பயிற்சியளிக்கும் நோக்கத்துக்காக ஈடுபடுத்த முன்னுகின்ற தொழில் தருநர் ஒருவர், அவரை ஈடுபடுத்துவதற்கு முன்னர், அத்தகைய பயிற்சியாளருடன் (இதனகத்துப்பின்னர் "ஒப்பந்தம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆரம்பப் பயிற்சி ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ள வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒப்பந்தத்தை அதிகாரசபையில் பதிவுசெய்து கொள்ளலும் வேண்டும்.

(2) பயிற்சியாளர்களை ஈடுபடுத்த முன்னுகின்ற எல்லா தொழில் தருநர்களுக்கும், பயிற்சியாளர்களை ஈடுபடுத்துவதற்குத் தமது தாபனத்தில் இருக்கக்கூடியதான வெற்றிடங்களின் எண்ணிக்கையையும் அவற்றின் தன்மைபற்றியும் அதிகாரசபைக்குத் தகவல் கொடுப்பது கடப்பாடாதல் வேண்டும்.

எழுத்து மூலமான ஒப்பந்தங்கள்.

65. (1) அறுபத்து நான்காம் பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தம், எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படவேண்டிய பின்வரும் விபரங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைக் கொண்டிருத்தலும் வேண்டும் :—

(அ) பயிற்சியின் தன்மை, பாடத்திட்டம், நேர அட்டவணை மற்றும் பயிற்சிக்கான நோக்கம், மற்றும் முக்கியமாக, பயிற்சி எந்த வகையான தான்புரி தொழிலுக்கு அளிக்கப்படவிருக்கின்றதோ, அந்தத் தான்புரி தொழில் ;

(ஆ) தகுதிகாண் காலப்பகுதி (அத்தகைய காலப்பகுதி ஒரு மாதத்திற்குக் குறையாமலும் மூன்று மாதத்தை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும்) ;

(இ) ஆரம்பப் பயிற்சிக் காலம் தொடங்குதலும் அதன் காலப்பகுதியும் ;

(ஈ) பயிற்சி வளவுகளுக்கு வெளியே பெறப்படவேண்டிய ஏதேனும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ;

(உ) வழமையான நாளாந்தப் பயிற்சிநேரங்களின் அளவு ;

(ஊ) ஆரம்ப பயிற்சிக் காலத்தில் ஏதேனும் வேதனத்தின் அல்லது படியின் கொடுப்பனவும் விதிக்கப்படவேண்டிய வீதமும் ;

(எ) ஆரம்பப் பயிற்சிக்காலத்தில் பயிற்சியாளருக்கு உரித்தான விடு முறைக்காலத்தின் அளவு ;

(ஏ) எந்நிபந்தனைகள்மீது ஒப்பந்தம் முடிவுறுத்தல் பற்றி அறிவித்தல் கொடுக்கப்படலாமோ, அந்நிபந்தனைகள் ; அத்துடன்

(ஐ) அவசியமெனத் தோன்றக்கூடியவாறான வேறு எவையேனும் விப ரங்கள்.

(2) (இதனகத்துப்பின்னர் "பயிற்சியளிக்கும் தொழில்தருநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதான) தொழில் தருநரினாலும், பயிற்சியாளரினாலும் ஒப்பந்தம் கையொப்பமிடப்படல் வேண்டும், அத்துடன் அவர் பராயமடையாதவராயிருக்குமிடத்து, அவரது சட்டப் பிரதிநிதியினால் ஒப்பந்தம் கையொப்பமிடப்படல் வேண்டும்.

(3) பயிற்சியளிக்கும் தொழில் தருநர், ஒப்பந்தம் கையொப்பமிடப் பட்ட பின்னர், உடனடியாக, விடயத்திற்கேற்றாற்போன்று பயிற்சியாள ருக்கு அல்லது அவரது சட்டப் பிரதிநிதிக்கு கையொப்பமிடப்பட்ட பிரதி ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(4) செய்யப்படக்கூடிய எவையேனும் திருத்தங்களுக்கும் அவை தொடர்பிலும், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடை யனவாதல் வேண்டும்.

**ஆரம்ப பயிற்சிக் காலம்.**

66. (1) ஓர் ஆரம்ப பயிற்சிக் காலப்பகுதியானது, தகுதிகாண் காலப் பகுதியுடன் தொடங்கி, ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான பயிற்சிக் காலப்பகுதி முடிவுற்றதன்மேல் முடிவடைதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், பயிற்சியாளர் ஒருவர் தனது பயிற்சிக்காலப் பகுதியானது முடிவுறுமுன்னர் இறுதிப் பரீட்சையில் சித்தியடையு மிடத்து, அவரின் ஆரம்பப் பயிற்சிக்காலமானது அவர் பரீட்சையில் சித்தியடைந்ததும் முடிவடைதல் வேண்டும்.

(2) பயிற்சியாளர் ஒருவர் தமது இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தத் தவறுமிடத்து, அவர் அவ்வாறு வேண்டுகோள் விடுத்தால் அவரது ஒப் பந்தமானது, ஆகக்கூடியதான ஓராண்டு காலப்பகுதியொன்றுக்கமைய, அவர் பரீட்சைக்குத் தோன்றக்கூடிய அடுத்த சந்தர்ப்பம்வரை நீடிக்கப் படல் வேண்டும்.

**ஒப்பந்தத்தைப் பதிவுசெய்தல்.**

67. (1) பயிற்சியளிக்கும் தொழில்தருநர் ஒருவர் பயிற்சியாளர் ஒரு வருடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை, அது செய்துகொள்ளப் பட்டதும் உடனடியாக இடாப்பில் பதிவுசெய்வதற்காக அதிகாரசபைக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும். அவ்விண்ணப்பத்துடன் அவர் ஒப்பந்தத்தின் பிரதியொன்றை இணைத்தனுப்புதல் வேண்டும். ஒப் பந்தத்தின் முக்கிய பொருத்தனைகள் திருத்தப்படும் இடத்தும் இதே முறை, ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு பயிற்சியளிக்கும் தொழில்தருநரும் அதிகாரசபைக்கு—

(அ) பயிற்சியாளரால் பெறப்பட்ட தொழில்பயிற்சி தொடர்பான அல் லது அதனோடு தொடர்புபட்ட ஏதேனும் முன்னைய பயிற்சி பற் றியும் ; அத்துடன்

(ஆ) பயிற்சியளிக்கும் அலுவலர்களின் நியமனம் பற்றியும், அறிவித்தல் வேண்டும்.

அதிகாரசபை ஒப்பந்தங்களின் ஆகக்கூடிய எண்ணிக்கையைக் குறித்துரைத்தல் வேண்டும்.

68. (1) அதிகாரசபையானது அது தகுந்ததெனக் கருதுமிடத்து, அத்துடன் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்புக்களைக் கருத்தில் எடுத்தும் அமைச்சரின் அங்கீகாரத்துடனும், ஒவ்வொரு பயிற்சியாளர் தான்புரிதொழில் தொடர்பிலும் பதிவுசெய்யப்படக்கூடிய ஆகக்கூடிய ஒப்பந்தங்களின் எண்ணிக்கையைக் குறித்துரைக்கின்றதும், கசெற்றில் வெளியிடப்படுவதுமான கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) பயிற்சியாளர் ஒருவருடன் ஒப்பந்தமொன்று செய்துகொள்ள முன்னுகின்ற தொழில்தருநர் எவரும், அத்தகைய ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கு முன்னர், அக்குறிப்பிட்ட பயிற்சியாளர் தான்புரி தொழிலில் ஒப்பந்தங்களின் ஆகக்கூடிய எண்ணிக்கையானது அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றதா என்பதை அதிகாரசபையிடம் செவ்வை பார்த்தல் வேண்டும்.

(3) விடயத்திற்கேற்றவாறு பயிற்சியாளர் ஒருவராகப் பயிற்சிபெற விரும்புகின்ற ஆளொருவராக இருந்தாலும்சரி, அல்லது அவர் தொழில்தருநர் ஒருவராக இருந்தாலும்சரி இன்னலுற்ற இறத்தவரெவரும் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம். அத்துடன் மேன்முறையீடு செய்யப்பட்டதன்மேல், அமைச்சர், (1) ஆம் உட்பிரிவு தொடர்பிலான அதிகாரசபையின் முடிபைத் திருத்தலாம் அல்லது புறத்தொதுக்கி வைக்கலாம்.

திருத்தத்தை அல்லது நீக்குதலைப் பதிதல்.

69. (1) ஒவ்வோர் ஒப்பந்தமும், அதன் முக்கிய நியதிகளின் ஒவ்வொரு திருத்தமும்—

(அ) சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க ஒப்பந்தம் இருந்தால்-;

(ஆ) அவசியமான தனிப்பட்ட அத்துடன் தொழினுட்பத் தகைமைகள் பயிற்சியளிக்கும் தொழில்தருநருக்கு இருந்தால், அத்துடன், பயிற்சியாளர்களை ஈடுபடுத்தவும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் பயிற்சி அளிக்கும் வளவுகள் ஏற்றவையாக இருந்தால்,

இடாப்பில் பதியப்படல் வேண்டும்.

(2) இதற்குமுன்னர் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் 70 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு நிறைவேற்றப்பட்டிராமலும் குறைபாடுகளுக்குப் பரிகாரம் காணப்பட்டிராமலும் இருக்குமிடத்து, அதிகாரசபையானது, ஒப்பந்தமொன்றை இடாப்பில் பதிய மறுக்கலாம்.

குறைபாடுகள் காணப்படுமிடத்து பரிகாரங்கள் காணுமாறு அதிகாரசபை கட்டளையிடல் வேண்டும்.

70. பயிற்சியாளர்களுக்கு ஆரம்பப் பயிற்சியளிப்பதற்கான எவரேனும் தொழில்தருநரின் உகந்த தன்மை தொடர்பில் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அத்துடன் பயிற்சியாளர்களுக்குத் தீங்கு விளைவிக்காத பரிகாரம் ஒன்று கிடைக்கக்கூடியதாக இருக்கின்றதெனக் காணப்படுமிடத்து, அதிகாரசபையானது, அது குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் அப்பரிகாரத்தைப் பிரயோகிக்குமாறு சம்பந்தப்பட்ட தொழில்தருநருக்குக் கட்டளையிடல் வேண்டும்.

தகுதிகாண்நிலை காலப்பகுதியின் போது அறிவித்தல் இல்லாது முடிவுறுத்தல்.

71. ஆரம்பப் பயிற்சிக் காலப்பகுதியொன்று தகுதிகாண் காலப்பகுதியின்போது, அறிவித்தல் இல்லாது எந்நேரத்திலும் முடிவுறுத்தப்படலாம்.

முடிவுறுத்தலுக்கான அறிவித்தல்.

72. (1) தகுதிகாண்நிலைக் காலம் முடிவுற்றதன்பின்பு அதிகாரசபைக்கு முடிவுறுத்தலுக்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டு, அத்துடன் அத்தகைய விண்ணப்பத்துக்கு அதிகாரசபை அனுமதியளித்தால் மட்டுமே, ஒப்பந்தமானது முடிவுறுத்தப்படலாம்.

(2) அத்தகைய விண்ணப்பத்தைச் செய்வதற்கும், அத்தகைய விண்ணப்பம் தொடர்பிலான ஏதேனும் விசாரணையை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறையும், அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதிப்பதற்கான ஏதுக்களும் விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒப்பந்தமொன்றின் முடிவுறுத்தலுக்கான விண்ணப்பமொன்றை ஒப்பந்தத்துக்கான எவரேனும் ஒரு திறத்தவர், அத்தகைய ஒப்பந்தத்தின் நியதிகளையும் நிபந்தனைகளையும் நிறைவேற்றத் தவறிவிட்டது என்ற ஏதுவின்மேல் அனுமதித்துக் கட்டளை ஒன்றை அதிகாரசபையானது ஆக்குமிடத்து—

(அ) அத்தகைய திறத்தவர் பயிற்சியளிக்கும் தொழில்தருநராக இருந்தால் அத்தகைய தொழில்தருநர் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நட்டஈட்டை பயிற்சியாளருக்குக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய திறத்தவர் பயிற்சியாளராயிருந்தால் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை அத்தகைய ஆரம்ப பயிற்சிக்கான செலவு தொகையாக அத்தகைய பயிற்சியளிக்கும் தொழில்தருநருக்கு அவர் மீளளிப்புச் செய்தல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் முடிபினால் இன்னலுற்ற திறத்தவர்களும், அத்தகைய முடிபுக்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

ஆரம்பப் பயிற்சி ஒப்பந்தத்தின் இடாப்பு.

73. அதிகாரசபையானது, ஆரம்பப் பயிற்சி ஒப்பந்தங்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். அதில் ஒவ்வோர் ஒப்பந்தத்தினதும் முக்கியமான பொருத்தனைகள் பதியப்படல் வேண்டும்.

செல்லுபடியற்ற உடன்படிக்கைகள்.

74. (1) ஒரு பயிற்சியாளரை அவரது ஆரம்பப் பயிற்சிக் காலப்பகுதி முடிவடைந்ததன்பின்னர் அவர் பயிற்சியாளர் தான்புரி தொழில் ஒன்றில் ஈடுபடுவதை மட்டுப்படுத்தும் ஏதேனும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் வெற்றும் வெறிதுமாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாருயினும், பயிற்சியாளர் எவரினுலும், பயிற்சியளிக்கும் தொழில்தருநர் ஒருவரினுலும் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை எதற்கும், அவ்வுடன்படிக்கை காரணமாக ஒப்பந்தத்தின் கடைசி மூன்று மாதகாலத்தின்போது, அத்தகைய பயிற்சியாளர்—

(அ) ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட ஆரம்பப் பயிற்சிக் காலப்பகுதி முடிவடைந்தபின்னர், குறித்துரைக்கப்படாத காலப்பகுதியொன்றுக்கு பயிற்சியளிக்கும் தொழில் தருநருடன் தொடர்பொன்றுக்குத் திறத்தவராக வருவதாகத் தம்மைப் பாரப்படுத்தினுல்,

(ஆ) ஆரம்பப் பயிற்சி உறவுக்கு வெளியே மேலதிகப் போதனையைப் பயிற்சியாளருக்கு ஏற்பாடு செய்வதற்கான செலவைத் தொழில் தருநர் கொடுத்துத் தீர்ப்பதற்கும், அப்பாரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்கேற்றதாக அத்தகைய செலவு இருப்பதற்கும் அமைவாக ஆரம்பப் பயிற்சிக்காலம் முடிவடைந்தபின்னர் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு பயிற்சியளிக்கும் தொழில்தருநருடன் ஊழியத் தொடர்பொன்றுக்குத் திறத்தவராக வருவதாகத் தம்மைப் பாரப்படுத்தினுல்,

இவ்வேற்பாடு ஏற்புடையதாகாது.

(2) ஒப்பந்தத்திற்கு வெளியே—

(அ) பயிற்சியாளர்மீது அவரது ஆரம்பப் பயிற்சிக்குக் கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடொன்றைச் சுமத்துகின்ற;

(ஆ) ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படவேண்டிய தண்டங்களைச் சுமத்துகின்ற;

(இ) சேதங்களுக்கான நட்டஈட்டுக்கான உரிமைக் கோரிக்கைகளின் எவையேனும் விலக்கல்களை அல்லது மட்டுப்பாடுகளைச் சுமத்துகின்ற;

(ஈ) முழு மொத்த தொகையொன்ருக பணச் சேதங்களுக்கான நட்டஈட்டு வீதத்தைத் தீர்மானிக்கின்ற,

உடன்படிக்கை எதுவும் வெற்றும் வெறிதுமாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுடன் இணங்காது செய்துகொள்ளப்படும் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை எதுவும் வெற்றும் வெறிதுமாதல் வேண்டும்.

75. (1) பயிற்சியளிக்கும் தொழில்தருநர் ஒருவர்— பயிற்சியளிக்கும் தொழில்தருநர் ஒருவரின் கடமைகள்.

(அ) பயிற்சியின் நோக்கம் நியமித்த காலவரையறைக்குள் எய்தப்படக் கூடியவகையில், அதற்கென அதிகாரசபையினுல் வழங்கப்படும் பயிற்சிக் கட்டளைகளுக்கிணங்க, தமது பயிற்சியின் நோக்கத்தை எய்துவதற்கு அவசியமான திறன்களும் அறிவும் பயிற்சியாளருக்குப் புகட்டப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்;

(ஆ) தாமே பயிற்சியளித்தல் வேண்டும் அல்லது அந்நோக்கத்துக்குத் தகுந்தவரென அவரினுல் தீர்மானிக்கப்படும் எவரேனும் அலுவலரிடம் வெளிப்படையாகப் பொறுப்பளித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அவரது பயிற்சிக்கும் அத்துடன் இடைக்கால மற்றும் இறுதிப் பரீட்சைகளில் சித்தியடைவதற்கும் (ஆரம்பப் பயிற்சிக்காலப் பகுதி முடிவடைந்தபின்னர் அத்தகைய பரீட்சைகள் நடாத்தப் பட்டாலுங்கூட) அவசியமான கருவிகள், வழங்குபொருட்கள் போன்ற தேவையான பொருட்களை பயிற்சியாளருக்கு வழங்குதல் வேண்டும்.

(2) பயிற்சியாளர் ஒருவர் தமது படிப்பைத் தொடருவதற்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் அவசியமான காலத்திற்குப் பயிற்சியளிக்கும் தொழில்தருநர் ஒருவர் அனுமதித்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின் ஏற்பாடுகள் பயிற்சி இடத்திற்கு வெளியே பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்பற்றப்படவேண்டிய இடத்தும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**பயிற்சியாளரின் கடமைகள்.**

76. பயிற்சியாளர் ஒருவர் அவரது பயிற்சியின் நோக்கத்தை எய்துவதற்கு அவசியமான திறமையை மற்றும் அறிவைப் பெறுவதற்குமான ஒவ்வொரு முயற்சியையும் செய்தல் வேண்டும். அவர் மிகவும் குறிப்பாக—

(அ) அவரது பயிற்சியின் பாகம் என்றவகையில் அவரிடம் பொறுப் பளிக்கப்பட்ட தொழில்களைக் கவனமாகப் புரிதல் வேண்டும்.

(ஆ) 75 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் எப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்காக நேரஓய்வு வழங்கப்பட்டிருக் கின்றதோ, அப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பற்றுதல் வேண்டும்;

(இ) பயிற்சியளிக்கும் தொழில்தருநரினால் அவரது பயிற்சியின் பாக மாக அவருக்கு வழங்கப்படும் அறிவுறுத்துரைகளுக்கு அல்லது அத்தகைய அறிவுறுத்துரைகளை அவருக்கு வழங்க உரித்துடைய எவரேனும் அலுவலரினால் வழங்கப்படும் அறிவுறுத்துரைகளுக்கு இசைய ஒழுகுதல் வேண்டும்;

(ஈ) பயிற்சி இடத்தில் பின்பற்றப்படும் ஒழுக்க விதிகளுக்கு மதிப்புக் கொடுத்தல் வேண்டும்;

(உ) கருவிகள், பொறித்தொகுதி மற்றும் வேறு நிறுவுகைகளை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்தல் வேண்டும்; அத்துடன்

(ஊ) தொழில் அல்லது வியாபார இரகசியங்கள் எவற்றையும் வெளி விடுதல் ஆகாது.

**பயிற்சித்தாபனங்கள் தொடர்பில் அதிகாரசபைக்குள்ள தத்துவங்கள்.**

77. பயிற்சித் தாபனங்களின் தன்மை, அளவு அத்துடன் அமைவிடம் தர அடிப்படையிலும் அளவு அடிப்படையிலும் போதுமான அளவு எண்ணிக்கையினதான தொழிற்பயிற்சி இடங்களுக்கு உத்தரவாதமளிப் பதாக இருப்பதையும், அத்துடன் வருங்காலத்தில் எதிர்பார்க்கப்பட வேண்டிய பயிற்சி இடங்களுக்கான தேவைக்குக் கொடுக்கப்படவேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுக்கின்ற அதேவேளையில், அத்தகைய பயிற்சி இடங்கள் உகந்தமுறையில் பயன்படுத்தப்படுவதையும் அதிகாரசபை உறுதிப்படுத்தல் வேண்டும்.

78. (1) அதிகாரசபையானது, பயிற்சி இடங்களின் அபிவிருத்தியைக் கண்காணித்து ஆணைக்குழுவுக்கும் அமைச்சருக்கும் ஒவ்வோராண்டும் மார்ச்சு மாதம் முப்பத்தோராம் தேதியளவில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அறிக்கையானது இனிவரும் ஆண்டுகளில் பயிற்சி வழங்கலில் ஏற்படக்கூடிய மேலான அபிவிருத்தி பற்றி விவரித்தல் வேண்டும், அத்துடன் சரிசமநிலையான பயிற்சி இடங்களில் வழங்கலுக்கு இடர் ஏற்படலாம் என்ற அறிகுறிகள் இருக்கின்றவிடத்து, அத்தகைய நிலைமைக்குப் பரிகாரம் காணும் பிரேரணைகளையும் அறிக்கை உள்ளடக்குதல் வேண்டும். **தொழிற்பயிற்சி அறிக்கை.**

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிக்கை மேலும் பின்வரும் விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்:—

(அ) முற்போந்த பஞ்சாங்க ஆண்டில்—

(i) முற்போந்த பன்னிரண்டு மாதங்களின்போது செய்துமுடிக்கப்பட்ட தொழிற்பயிற்சி ஒப்பந்தங்கள் ;

(ii) நிரப்பப்படாத பயிற்சி இடங்களின் எண்ணிக்கை அத்துடன், பயிற்சி இடங்களை நாடி அதிகாரசபையில் அந்நேரத்தில் பதிவுசெய்யப்பட்ட அவ்வாட்களின் எண்ணிக்கை ;

(ஆ) நடப்புப் பஞ்சாங்க ஆண்டிற்கு—

(i) பயிற்சி இடங்களை நாடுவர் என எதிர்பார்க்கப்படும் ஆட்களின் எண்ணிக்கை ; அத்துடன்

(ii) மீளாய்வின் கீழான செப்தெம்பர் முப்பதாம் தேதிவரை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் பயிற்சி இடங்களின் எண்ணிக்கை.

79. தொழில்தருநர் எவரும் ஆட்கள் எவரையும்— **பயிற்சியாளர்களை ஈடுபடுத்தலாம்.**

(1) (அ) பயிற்சி வளவுகளின் தன்மையும், சாதனமும் ஆரம்பப் பயிற்சிக்கு உகந்ததாயிருந்தாலன்றி ; அத்துடன்

(ஆ) பயிற்சியாளர்கள் எண்ணிக்கைக்கும் பயிற்சிக்கான வெற்றிட எண்ணிக்கைக்கும் அல்லது தமது சேவையிலுள்ள திறனுள்ள பணியாட்டொகுதியினருக்கும் இடையேயுள்ள விகிதமானது இயைவுள்ளதாயிருந்தாலொழிய, (பயிற்சிக்கு விகிதமானது தீங்கு விளைவிப்பதாயிருந்தாலன்றி)

பயிற்சியாளர்களாக ஈடுபடுத்துதல் ஆகாது.

(2) அவசியமான அறிவையும் திறன்களையும் முழுமையாகப் புகட்ட முடியாத பயிற்சியளிக்கும் வளவுகளானவை, அங்குள்ள குறைபாடுகளுக்கு, வளவுகளுக்கு வெளியே நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பரிகாரம் காணப்படமுடியுமென்றால், ஏற்றதெனக் கருதப்படல் வேண்டும்.

**மேலும் பயிற்சிக்கான செயற் திட்டங்கள்.**

80. (1) ஆளொருவர் அவருடைய தொழிற்பயிற்சியையும் ஆற்றல்களையும் பேணுவதற்கு அல்லது விரிவுபடுத்துவதற்கு, அத்துடன் தொழினுட்ப அபிவிருத்திக்குத் தம்மை இசைவாக்க அல்லது அவர் ஏற்கெனவே ஆரம்பப் பயிற்சி பெற்றுள்ள ஏதேனும் பயிற்சியாளர் தான்புரி தொழில் துறையில் பதவி உயர்ச்சி பெறுவதற்கு அவரை இயலச் செய்வதற்கு மேலதிக பயிற்சி அளிக்கப்படல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது அபிவிருத்தித் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வழிகாட்டி நெறிகளுக்கு இணங்க, மேலதிகப் பயிற்சிக்கு செயற்றிட்டங்களைத் தயார் செய்யலாம்.

(3) அதிகாரசபையானது தாபனத்துடனும் கலந்தாலோசனையுடன் அதன் ஊழியர்களின் சார்பில் விடயப்பொருள், தரங்கள் நடவடிக்கை மற்றும் அத்தகைய பரீட்சையை நடாத்துதல் பற்றித் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் அந்நோக்கத்திற்காகப் பரீட்சகர்கள் சபைகளையும் அமைத்தல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, மேலதிக பயிற்சியின் பயனை பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு, திறமை மற்றும் அனுபவத்தை சோதிப்பதற்காக பரீட்சைகளை நடாத்தலாம் அல்லது அதன் சார்பில் பரீட்சைகளை நடாத்த வேறு முகவர் நிலையங்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

**மீள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.**

81. (1) மீள்பயிற்சியானது, ஆள் ஒருவர் ஏற்கனவே எப்பயிற்சியாளர் தான்புரி தொழிலில் ஆரம்பப் பயிற்சியொன்று பெற்றுள்ளாரோ, அப் பயிற்சி தவிர்ந்த வேறு பயிற்சியாளர் தான்புரி தொழிலில் பயிற்சி பெறுவதற்கு ஆளொருவருக்குத் தகைமையளிப்பதற்காக மீள்பயிற்சி அமைக்கப்படலாம்.

(2) மீள்பயிற்சி செயற்றிட்டங்களானவை அவற்றின் விடயப்பொருள், தன்மை,நோக்கம், மற்றும் பயிற்சிக் காலம் என்பனவற்றைப் பொறுத்த வரையில், ஏதேனும் தொழிற் பயிற்சித் துறையுடன் தொடர்புடைய விசேட தேவைப்பாடுகளுக்கு நேரொத்தனவாக இருத்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மீள் பயிற்சிச் செயற்றிட்டமும், அபிவிருத்தித் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வழிகாட்டி நெறிகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும்.

(4) அதிகார சபையானது, அத்தகைய பரீட்சைகளுக்கான விடயப்பொருள், நோக்கம், தரங்கள், நடவடிக்கைமுறை, அத்துடன் அத்தகைய பரீட்சைகளுக்கு அனுமதிக்கப்படுவதற்கான நிபந்தனை என்பவற்றை தீர்மானித்தல் வேண்டும் என்பதோடு அந்நோக்கத்திற்காக பரீட்சகர்கள் சபைகளைத் தாபித்தலும் வேண்டும்.

(5) அதிகார சபையானது, மீள்பயிற்சியின் பயனைப் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு, திறமை மற்றும் அனுபவம் ஆகியவற்றைச் சோதிப்பதற்குப் பரீட்சைகளை நடாத்தலாம். அத்தகைய பரீட்சைகள், தொழிற்பயிற்சிக்கு இயைபான துறையுடன் தொடர்புடைய விசேட தேவைப்பாடுகளுடன் நேரொத்தனவாக இருத்தல் வேண்டும்.

82. (1) அதிகார சபையானது, ஏதேனும் அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்க தேசிய தொழில் சோதனைகளை நடாத்துவதற்கு தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும். தேசிய தொழில் சோதனைகளை முறைப்படுத்தல்.

(2) அதிகார சபையானது, தேசிய தொழில் சோதனையை நடாத்துதல் வேண்டும், அல்லது அதிகார சபையின் பணிப்புரையின் மேற் அத்தகைய தேசிய தொழில் சோதனையை நடாத்துவதற்கு வேறு ஏதேனும் மூன்றாம் நிலையத்திற்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

(3) அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்கவும், ஆணைக்குழுவின் பணிப்புரைக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைவாகவும், அதிகாரசபையானது, குறித்த தொழிலில் தேவைப்பட்ட தேர்ச்சியும், திறமையும் பெற்று அத்துடன், தொழில் சோதனைகளை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவதற்கு செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

83. (1) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் பயிற்சி விதிப்புக்கட்டணக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தாபனம் தொடர்பிலும், ஒவ்வோராண்டும் பயிற்சி வரியொன்று விதிக்கப்பட்டுச் செலுத்தப்படுதல் வேண்டும். பயிற்சி வரி

(2) அமைச்சரானவர் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் சம்மதத்துடன், பயிற்சி விதிப்புக் கட்டணக் கட்டளையொன்றை ஆக்கலாம். அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) பயிற்சி விதிப்புக்கட்டணக் கட்டளையானது—

(அ) வரிவீதத்தை அல்லது வரித்தொகையை ;

(ஆ) அத்தகைய வரியைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகக்கூடிய தாபனங்களை ;

(இ) கொடுப்பனவின் விதித்துரைக்கப்பட்ட முறையை ;

(ஈ) கொடுப்பனவின் விதித்துரைக்கப்பட்ட தேதியை ;

(உ) அத்தகைய வரியை சேகரிப்பதற்கென அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆளை அல்லது தாபனத்தை,

குறித்துரைக்கலாம்.

(4) வரி செலுத்துவதற்கு அமைய இருக்கும் ஏதேனும் தாபனம் தொடர்பில் ஏதேனும் ஆண்டுக்கு வருமதியான வரி, அதிகார சபைக்குச் செலுத்தப்படாதவிடத்து, அதிகாரசபையானது அதன் தற்றுணிபின் பேரில், வரித்தொகையின் பதினைந்து சதவீதத்தை விஞ்சாத பணத்தொகையொன்று வரியுடன் சேர்க்கப்பட்டு, அதனோடு அறவிடப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம். அவ்வாறு வரியுடன் சேர்க்கப்படும் பணத்தொகையெதுவும், வரியின் பாகமொன்றாக அமைகின்றதெனக் கருதப்படல் வேண்டும்.

(5) வரி செலுத்துவதற்கு அமைந்ததாக இருக்கும் ஏதேனும் தாபனம் தொடர்பில் ஏதேனும் ஆண்டுக்கு வருமதியாகவுள்ள பயிற்சி வரி, அதிகார சபைக்குச் செலுத்தப்படாதவிடத்து, அத்தகைய வரியானது, அரசுக்கு வருமதியான கடன் ஒன்று என்றாற்போன்று, அதிகாரசபையினால் அற விடப்படலாம்.

(6) தொண்ணூற்றாறாம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், அத்தகைய கட்டளை தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

முன்னேற்றம் பற்றிய பதிவேடுகளைத் தொழில்தருநர் பேணுதல்.

84. (1) தொழில்தருநர் ஒவ்வொருவரும், தமது தாபனத்தில் தொழிற் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு பயிற்சியாளரினதும் பயிற்சி முன்னேற்றம் பற்றிய பதிவேடுகளை, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பேணுதல் வேண்டும்.

(2) தொழில்தருநர் ஒவ்வொருவரும், தமது தாபனத்தில் பயிற்சிபெற்றுக்கொண்டிருக்கும் பயிற்சியாளர் தொடர்பில், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய கால இடைவெளியிலும், அதிகாரசபைக்கு அத்தகைய தகவலையும் விபரத்திரட்டுக்களையும் கொடுத்துதவுதல் வேண்டும்.

அதிகார சபையின் பதிவேடுகள்.

85. அதிகாரசபையானது அவசியமானவாறான அத்தகைய பதிவேடுகளை, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பேணுதல் வேண்டும்.

ஒப்பந்தத்தின் பிணிக்கும் பயன்.

86. பயிற்சி ஒப்பந்தமொன்றுக்கான திறத்தவரெவரையும் இச்சட்டத்தின் மீறுகையொன்றைப் புரிவதற்குத் தூண்டுகின்ற, அல்லது முயன்று ஏவுகின்ற, அல்லது அத்தகைய மீறுகையைப் புரியுமாறு வேறு வகையில் ஏவுகின்ற பின்னின்று தூண்டுகின்ற, அல்லது அத்தகைய மீறுகைக்கு உதவுகின்ற, அல்லது உடந்தையாக இருக்கின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

அதிகார சபையின் உறுப்பினரின் உடலுக்கு எதிராகவோ அல்லது அவரினது ஆதனத்துக்கு எதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

87. அதிகாரசபையின் உறுப்பினரின் உடலுக்கெதிராகவோ அல்லது அவரது ஆதனத்துக்கெதிராகவோ அதிகாரசபைக்கு எதிராகக் கொண்டு வரப்படும் ஏதேனும் வழக்கில், எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

அதிகார சபையின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்கசேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.

88. அதிகாரசபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கத்திற்கும் அதன் கருத்தெல்லைக்கும் உட்பட பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் அல்லது அதிகார சபையின் பணிப்பின் பேரில் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

89. (1) தொடர்ச்சி அல்லது வழக்குத் தொடுப்பு எதுவும்—

(அ) இச்சட்டத்தின் கீழ் அதிகார சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக்கொள்ளப்படும் எதற்காகவும், அதிகாரசபைக்கு எதிராக இருத்தல் ஆகாது; அல்லது

(ஆ) அதிகார சபையின் எவரேனும் உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவரினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பில் அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்படுகின்ற அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக, அவருக்கு எதிராக இருத்தல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னால் அதிகார சபையினால் அல்லது அதற்கு எதிராகக் கொண்டுவரப்படும் தொடர்ச்சி அல்லது வழக்குத் தொடுப்பு எதிலும், அதிகார சபையால் கூறப்படும் ஏதேனும் செலவு. அதிகாரசபையின் நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும் என்பதோடு அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றத் தொடுப்பில் அதிகாரசபைக்கு கொடுப்பனவு செய்யப்படும் அல்லது அதிகார சபையினால் அறவிடப்படும் எவையேனும் செலவு தொகைகள் அதிகாரசபையின் நிதியில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

(3) ஏதேனும் வழக்கில் அல்லது குற்றத்தொடுப்பில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் கூறப்பட்டவாறு அத்தகைய எவரேனும் ஆளினால் கூறப்பட்ட ஏதேனும் செலவினம் அத்தகைய வழக்கில் அல்லது குற்றத்தொடுப்பில் அவரால் அத்தகைய செலவினம் மீளப்பெறப் படாதிருப்பின் நீதிமன்றமானது அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படவேண்டுமென்று தீர்மானிக்குமிடத்து அதிகார சபையின் நிதியத்திலிருந்து கொடுக்கப்படும்.

பயிற்சியளிக்கும் தொழில் தருநரால் புரியப்படும் தவறுகள்.

90. (1) தொழில்தருநர் எவரும்—

(அ) தகைமை அற்றிருக்கும் ஆளெவரையும் பயிற்சியாளர் ஒருவராக ஈடுபடுத்தினால்,

(ஆ) பயிற்சி ஒப்பந்தமொன்றின் நியதிகளையும் நிபந்தனைகளையும் நிறைவேற்றத்தவறினால்; அல்லது

(இ) அத்தகைய ஏற்பாடுகளின்கீழ் ஈடுபடுத்துவதற்கு அவர் தேவைப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கை தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறினால்,

இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தொழில்தருநர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மேல், ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) தகவல் எதையும் அல்லது விபரத்திரட்டு எதனையும் கொடுத்துதவுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட பயிற்சியளிக்கும் தொழில்தருநர் எவரும் அல்லது வேறு ஆள் எவரும்—

(i) அத்தகைய தகவலை அல்லது விபரத்திரட்டைக் கொடுத்துதவ மறுத்தால் அல்லது அசட்டையாக இருந்தால் ; அல்லது

(ii) பொய்யான அல்லது பொய்யானதென அவருக்குத் தெரிந்த அத்துடன் ஒன்றில் பொய்யானதென அவருக்குத் தெரிந்த அல்லது அவர் நம்புகின்ற அல்லது உண்மையானதென அவர் நம்பாத தகவல் எதையும் அல்லது விபரத்திரட்டு எதையும் கொடுத்துதவினால் அல்லது கொடுத்துதவச் செய்வித்தால், அல்லது

(iii) அவரினால் கொடுத்துதவப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தகவல் எதையும் பெறுவதற்கு அவசியமான வினா எதற்கும் மறுமொழி சொல்ல மறுத்தால் அல்லது பொய்யான மறுமொழி சொன்னால் ;

(ஆ) அதிகாரசபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நுழைவை, பரிசோதனையை, பரீட்சையை அல்லது, விசாரணையைச் செய்வதில் நியாயபூர்வமான வசதிக்கு மறுப்புத் தெரிவித்தால் அல்லது வேண்டுமென்றே அசட்டை செய்தால்;

(இ) ஆரம்பப்பயிற்சி ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அங்கீகாரம் பெறாது, ஒரு பயிற்சியாளரை மேலதிக நேர வேலையை செய்யத் தேவைப்படுத்தினால்,

(ஈ) அவரின் பயிற்சியுடன் தொடர்பில்லாத ஏதேனும் வேலையில் பயிற்சியாளர் ஒருவரை வேலைக்கு அமர்த்தினால்;

(உ) பரிசோதகர் ஒருவராக பொய்யாகத் தம்மைக் காட்டிக்கொண்டால் ;

(ஊ) எவையேனும் முக்கிய விபரங்கள்பற்றி பரிசோதகர் ஒருவருக்கு பொய்யான கூற்று எதையும் கூறினால் அல்லது அவைபற்றி, பொய்யானதெனத் தெரிந்துகொண்டு கூற்று எதையும் கூறினால் ;

(ஏ) ஒரு பரிசோதகரால் கொடுக்கப்படும் சட்டமுறையான ஏதேனும் பணிப்புகளுக்கு இணங்கி நடக்க மறுத்தால் அல்லது தவறினால்

(ஏ) ஒரு பரிசோதகர் அவரது தத்துவங்களை அல்லது கடமைகளை பிரயோகிக்கையில், அவருக்கு முட்டுக்கட்டையாக இருந்தால் அல்லது அவரைத் தடுத்தால் ; அல்லது

(ஐ) தண்டப் பணத்தைக் கொடுப்பதற்கான ஏதேனும் வேண்டுகோளுக்கு இணங்கியொழுகத் தவறினால்,

அத்தகைய தொழில் தருநர் அல்லது வேறு ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மேல், ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

91. இச்சட்டத்தில், எத்தவறொன்றுக்கு வேறு தண்டனை எதற்கும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படவில்லையோ அத்தவறொன்றுக்குக் குற்றவாளியாகின்ற ஆளெவரும், நீதிவானொருவர் முன்னிலையான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும். பொதுத் தண்டம்.

92. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்று ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து— ஆட்கள் குழுக்களினால் செய்யப்படும் தவறுகள்.

(அ) அக்குழுவானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருந்தால், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், அத்தவறுக்குக் குற்றவாளியெனக் கருதப்பட வேண்டும் ; அத்துடன்

(ஆ) அக்குழு ஒரு குழுமமாக இருந்தால், குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும், அத்தவறுக்கு குற்றவாளியெனக் கருதப்படல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பணிப்பாளர் அல்லது பங்காளர் எவரும் அத்தகைய தவறு அவர் அறியாமலே செய்யப்பட்டது அல்லது அத்தவறு செய்யப்படுவதனை தவிர்ப்பதற்கு எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோகித்தார் என எண்பிப்பாராயின், தவறொன்றுக்கு குற்றவாளியாகக் கருதப்படல் ஆகாது.

விதிகள்.

93. எவ்விடயங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டிருக்கின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றதோ, அவ்வெல்லா விடயங்கள் தொடர்பிலும், அதிகாரசபையானது விதிகளை ஆக்கலாம். அத்தகைய விதி எதுவும் அதற்கு அமைச்சரினால் அங்கீகாரமளிக்கப்படும் வரை நடைமுறைக்கு வருதல் ஆகாது.

ஒழுங்குவிதி.

94. (1) எவ்விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறதோ, அவ் விடயங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றியும், அமைச்சர், பின்வரும் எல்லா விடயங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் விடயங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) பயிற்சியை அளிக்கும் ஆட்களுடைய தொழினுட்ப மற்றும் தனிப்பட்ட தகைமைகள்;

(ஆ) பயிற்சி அளிக்கின்ற ஆட்களின் தகைமைகள் தொடர்பில் வழங்கப்பட வேண்டிய விலக்களிப்புகள்;

(இ) பயிற்சியளிக்கும் இடங்களின் உகந்த தன்மை.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அது அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியில் குறிப்பிடப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்துக்கெனக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியில் இருந்து நீக்கப்பட்டுவிட்டாதாகக் கருதப்படல்வேண்டும்.

நீக்கல், மற்றும் பேணல்கள்.

95. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 49 ஆம் இலக்க, தேசிய தொழிற்பயிற்சிச் சட்டம் இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

(2) மேற்கூறப்பட்ட சட்டத்தின் நீக்கம் எப்படியிருப்பினும்—

(அ) எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனமும், எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் தேசிய தொழிற்பயிற்சிச் சபையினால் செய்யப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் அதிகார சபைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும் ;

(ஆ) தேசிய தொழில் பயிற்சிச்சபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், இச்சட்டம் தொடங்கிய தேதிக்கு நேர்முந்திய நாளன்று, அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் அதிகார சபையின் ஊழியராக இருப்பதற்குச் சம்மதிக்கு

மிடத்து, அத்தகைய அதிகார சபையின் அலுவலர் மற்றும் சேவையாளராகக் கருதப்படல் வேண்டும். இது இச்சட்டம் தொடங்கிய தேதியில் இருந்து பயனுறுவதாதலும் வேண்டும்.

(இ) 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, தேசிய தொழிற் பயிற்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட எல்லாத் தொழிற் பயிற்சி ஒப்பந்தங்களும் அச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட ஒப்பந்தங்களாகக் கருதப்படல் வேண்டும்; அத்துடன்

(ஈ) தேசிய தொழிற் பயிற்சிச் சபையினால் ஆக்கப்பட்ட எல்லா விதிகளும், பயிற்சித் தரங்களும், இச்சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், இச்சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியில் இருந்து இரண்டு ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப் பகுதிக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். ஆயின், அதிகார சபையானது, எந்நேரத்திலும் அத்தகைய விதிகளை அல்லது பயிற்சித் தரங்களை திரிபுபடுத்தலாம் அல்லது நீக்கலாம்.

96. (1) அதிகார சபையானது, இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து இரண்டு ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு அமைச்சரின் அனுமதியுடன் தொழிற்பயிற்சி ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளலாம் என்பதோடு, 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, தேசிய தொழிற் பயிற்சிச் சட்டத்தின் ஏற்பாடுகள், சொல்லப்பட்ட சட்டம் நீக்கப்படவில்லை என்றாற் போன்று, சொல்லப்பட்ட ஒப்பந்தத்திற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*அபிவிருத்தித் திட்டமொன்று இல்லாமை எவ்வாறிருப்பினும், இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு அதிகார சபையானது தத்துவங்களைப் பிரயோகித்தல்.*

(2) அமைச்சரானவர் இச்சட்டம் தொடங்கியதிலிருந்து இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு, அபிவிருத்தித் திட்டம் எதுவும் இல்லாத பட்சத்தில், ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிப்பதற்கு அதிகாரசபைக்கு அதிகாரம் அளிக்கலாம்.

(3) அமைச்சரானவர், தேசிய தொழிற்பயிற்சிச் சபையிலிருந்து அதிகார சபைக்குப் பணிகளைக் கைமாற்றுவதனை வசதிப்படுத்தும் நோக்கத்துக்காகவும், எதிர்பாராத வில்லங்கம் எதற்கும் ஏற்பாடு செய்வதற்காகவும், நிலைபெயர்காலக் கட்டளைகளை ஆக்கலாம் ; இவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், இச்சட்டம் தொடங்குவதிலிருந்து இரண்டாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப் பகுதிக்கு பயனுடையனவாதல் வேண்டும்.

97. இச்சட்டம் இப்பாகத்தின் நோக்கத்துக்காக, சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி—

*பொருள்கோடல்.*

"தொழில்தருநர்" என்பது, எந்த ஆள் வேறு எவரேனும் ஆளை, ஊழியத்திற்காக ஏதேனும் தாபனத்தில் வேலைக்கமர்த்துகிறாரோ, அந்த ஆள் எனப் பொருள்படும். அத்துடன் அத்தகைய தாபனத்தின் ஊழியர்களின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாக இருக்கும் ஆளெவரையும் உள்ளடக்கும்;

"தாபனம்" என்பது, கைத்தொழில், வியாபாரம், தொழில் அல்லது உயர்தொழில் எங்கு கொண்டு நடாத்தப்படுகின்றதோ அந்த இடமெனப் பொருளாகும்;

"குறித்துரைக்கப்பட்ட உயர்தொழில்" என்பது, எவ்வுயர் தொழில் தொடர்பில், அத்தகைய உயர்தொழிலை மேற்கொள்வதற்கு முன்னர், உறுப்பினர்களுக்கான தொழிற் பயிற்சிக்குச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிராததுடன் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தொழிற் பயிற்சி அளிப்பதற்கு உயர்தொழிலின் ஆளும் குழுவின் (அவ்வாறு எதுவும் இருப்பின்) சம்மதத்துடன் அமைச்சரினால் அது குறித்துரைக்கப்படுகின்றதோ அவ்வுயர் தொழில் எனப் பொருளாகும்;

"பயிற்சியாளர்" என்பது, எந்த ஆள் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் பயிற்சிநெறி ஒன்றை மேற்கொள்ளுகின்றாரோ அந்த ஆள் எனப் பொருளாகும் என்பதுடன், தொழில் பயிலுநர் ஒருவரையும் உள்ளடக்கும்; அத்துடன்

"தொழிற் பயிற்சி" என்பது, ஆரம்பப் பயிற்சி, மேலதிகப் பயிற்சி, மற்றும் மீள்பயிற்சி என்று பொருளாகும்.